பால வித்யா

தொகுதி 1 பகுதி 8

ஆகஸ்டு 1930

JL
ஊ211, N30 BV
N30·1·8
188774

1271 Regd. No. M. 2573.

# பாலவித்யா.

10 SEP 1930



குறிப்பு:— சந்தாதுகை செலுத்தாதவர்கள் தாமதமன்னியில் M O. செய்யவும். துகை அனுப்பாதவர்களுக்கு அடுத்த ஸஞ்சிகை V. P ல் அனுப்பலாகும். V. P.ல் அனுப்புவதில் சந்தாதாரர்களுக்கு 3அணா ஜாஸ்தி செலவாகும்.

## விஜ்ஞாபனம்

செந்தமிழ்ச் செல்வர்காள்! நந்தம் பாலவித்யா முந்திய பகுதிகள் நுந்தம் பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனவன்றோ? அவற்றை நும் அரிய காலத்திற் சிறிதளவேனும் செலவழித்துப் படித்துப் பார்த்திருப்பீர்களென்றே நம்புகிறோம். இதுவரையில் நீவிர் அப்படிப் படிக்க முடியாதிருப்பினும் இனியாகிலும் தயவுசெய்து அவைகளையும் இப்பகுதியையும் படித்துப் பார்த்துச் சந்தாதாரராகச் சேருவதவும், நும் நண்பர் முதலாயினோர்க்கு எடுத்துச் சொல்லி அவர்களையும் சந்தாதாரராகச் சேரச் செய்யவும் பெரிதும் வேண்டிக்கொள்கிறோம்.

பாலவித்யா பாரத பல நன்னோக்கங்களைக் கொண்டு ஆரம்பிக்கப் பெற்றிருக்கிறதென்பதை வேண்டுகோள் என்னும் தலைப்புப் பாட்டாலே காட்டியிருக்கிறோம். எந்த நோக்கமும் மக்கள் பலருடைய ஆதரவைப் பெற்றாலன்றி நாட்டிற்பரவி நன்மை பயக்கும் நிலையை அடைய முடியாது. இதனை நீவிர் நும் உணர்ந்தே இருப்பீர். ஆகவே சந்தாதாரராகச் சேர்தலிலும் சேர்வித்தலிலும் மிக்க விரைவும் ஊக்கமுங் கொள்வீராயின் நம் நாட்டுக்கு எங்ஙனே நல்ல தொண்டாற்றுதலாகிய நற் காரியத்தைச் செய்தவர்கள் ஆவீர். எங்கள் தொண்டும் பல் நல்வழிகளிலே பரந்து பயன் தருவதாகும்.

"ஒன்றே செய்யவும் வேண்டும்; ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும்; நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும்; இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும்."

(கபிலர்)

பதிப்பாளர்கள்.

N.B.—சந்தா துகையை அனுப்பி சந்தாதாரராக சேருபவர்கள் தமக்கு கிடைத்த பகுதிகள், கிடைக்கவேண்டிய பகுதிகள் விபரம் தெரிவிக்கவும்.


# பாலவித்யா

(மாதப் பத்திரிகை.)

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"
"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

| தொகுதி I | 1930 ௵ ஆகஸ்டு௴<br>பிரமோதூதஞு ஆவணி௴ | பகுதி VIII |
| --- | --- | --- |


ஸ்ரீ:

## கல்வியும் பயனும்.

கடலூர்
தமிழாசிரியர் தே. ஆ. ஸ்ரீநிவாஸாசாரி எழுதியது.

### (1) அவசியம்.

கல்வியென்பது இன்னதென யாவரும் அறிந்தவிஷயமேயாகும். பொருட்செல்வம் பூரியரால் போற்றப்படுதலேபோல இதுவும் அறிவுடைய பல்லோராலும் பாராட்டப்படுகின்றது. கல்விசான்றோனை அறிவினன் எனவும், அஃதிலானைப் பாமரன் எனவும் பகருவர் உலகோர். இயற்கையிலேயே யாவருக்கும் வாய்ப்புடைய மதியினை நுட்பமும் திட்பமும் செய்யவல்ல தக்கதொரு சாதனமே படிப்பாகும். உடலினைத் தக்க வுணவூட்டி, என்பு தசை நாராதிய வலிவுறும் வண்ணம் பற்பல தேகப் பயிற்சிகள் பயின்று பயின்று இன்மையுறுவிப்பதுபோன்றே, நாம் பெற்றுள்ள சரீரத்தினும் சிறுடைத்தெனப் புகலப்படும் அறிவு முதலியவற்றையும் வளம்பெறச் செய்தல் முக்கிய கடமையாகும். இக்கடப்பாட்டினை இடுக்கணின்றி நிறைவுறுத்தற்குப் படிப்பே உறுதுணையாகும். அந்தக்கரணங்கட்கு அநுசரணையாகப் படைக்கப்பட்டுள்ள சரீரமொன்றனையே பெரிதும் பரிவுபட்டு ஓம்பி,

அக்கரணங்களை அறிவை புறக்கணித்தல் நியாயமுடையதாகாது. அங்ஙனம் செய்தல் உயிரற்ற உடலுக்குப் பலவித அலங்காரங்கள் செய்து களித்தலை மானும். அப்படியே விழலுக்கு நீரிறைத்தலை ஒக்கும். எங்ஙனம் எடுத்தாளாத கருவிகள் நலிந்து பாழ்படுகின்றனவோ அங்ஙனமே நமது அந்தக்கரணங்களும், தக்க முறையிற் பயிற்றாது புறக்கணிக்கப்பெறின் கிளர்ச்சியும் வளர்ச்சியும் எய்தா. மனமும், புத்தியும் அகக்கரணங்களைச் சேர்ந்தனவே. இவை தூய்மையும், கூர்மையும் [illegible] அடைதற்கெனவே நாம் கற்குந்துறையிற் புகுதல் வேண்டும். அங்ஙனம் புகுதற்கண்ணும் நன்முறை பற்றாது தீநெறிப் படரநேரின், அஃது குளிக்கப்போய்ச் சேற்றினைப் பூசிக்கொண்டதாக முடியும். இக் கல்வி நற்றுறையை நீக்கி, ஏனைய எத்துறையானும் உட்காரணப்பொலிவுக் குழைத்தல் வீணாம்.

கூரிய மதியிலான் இவ்வுலகிடை உலகியல், அன்றித் தெய்வவழியில் வாழ்வினை ஒழுங்குற நடத்துவது இறையும் இயலாது. கேவலம் லௌகிக வாழ்விற்கே நுட்ப அறிவின் உறுதுணையை அனுத்தோறும் நாடுவது நாம் நன்கறிந்த விடயமே. இதுபோலத்தான் முற்றிய நுண்ணறிவு, வைதிக வாழ்வினைக் குறிக்கோளாக்கொண்டு நடப்போர்க்கும் மெத்த அவசியமாகிறது. பொருள் முதலாய பிற செல்வங்கள், எத்துணை அவசியமானவையாக நாடோறும் இந் நானில வாழ்க்கையிற் காணக் கிடக்கின்றனவோ, அதனைவிடப் பன்மடங்கு முக்கியமானதாகக் கல்விச் செல்வம் கருதக் கிடக்கின்றது. இக் கல்விப்பேற்றின் பெருமை குறித்துப் பலபடப் பகரவேண்டுவதில்லை. கல்வியென்று தொடங்கும் எத்தகைக் கட்டுரையினிடத்தும் இப் பெருமைகளின் தொகுப்பினைக் கண்ணுறல் கூடும்; அன்றிப் பல செய்யுட்களும் இதுகுறித்து ஆன்றோர்களால் வகுக்கப்பட்டுள. 'கல்லாமைந்தனிடம்', 'தாயும் மனத்திரியும்' எனவும் பழைய நூல்கள் பகருவது படித்தறிதற்குரியதே. தமிழ் நீதி நூற்களுட் பெரிதும் விழுமியதான திருக்குறளகத்தே அதனாசிரியர் கல்வியைக கைப்பற்றும்படி இருமுறையாலும் இடித்துரைத்தல் காண்டற்குரியதாம். இன்னம் எண்ணில் நூல்கள் இக்கூற்றுக்களைச் செவ்விதின் உவமைப்படுத்திக் கூறியுள்ளன. இவை யனைத்தும் கல்வியின் பெருமையைப் பல்லாற்றாலும் புலப்படுத்துவனவாம்.

கல்வி பொருள் ஆகிய இவ்விருவகைச் செல்வங்களும் ஒருங்கே தம்மருங்கு வாய்ப்புடையாரையும் இக் காசினியிற் காண்டலரிதாம். செல்வந்தர்பலர் கல்வியில் மந்தராகவும், கல்வியில் நிபுணர்கள் செல்வமில் வறியர்களாகவும் வாழ்ந்ததைக் கூறும் சான்றுகள் நூல்களிடம் பல்வுள. கண்கூடாகவும் இவ்வுண்மை காண்டற்கரிதன்று. இது நோக்கியே 'இருவேறு உலகத்தியற்கை: திரு வேறு தெள்ளிய ராதலும் வேறு' என்றுள்ளனர்போலும். மற்றும் இக்கூற்றினையே 'நாலடி'



நூல் நகைச்சுவை தோன்றுமாறும் நவிலுகின்றது. இவையாவும், செல்வமுடையார்க்குக் கல்வியகத்து உள்ள ஊக்கக்குறைவை எடுத்தியம்பவந்தனவேயாகும். தனவான்களனைவரும், தாங்களும் கல்விமான்களாகுமாறும், தந்தேயத்தார்களெவரும் கற்கும்பேற்றினையுடையோராமாறும் உழைப்பரேல், தேயத்தினை வலிந்துள்ள அறியாமை கட்டுவிட்டுக் கழல்வதுடன், மேற்கூறியுள்ள குறையினையும் புறகிடச்செய்தல் எளிதிற் கைகூடும். அங்ஙனம் நாட்டங்கொள்ளாமே, பொருளொன்றினையே பெரிதுங்குவிப்பான் கருதி, ஆயுள்நாள் முழுதும் வருந்தியுழைத்தல், கனி இருப்பக் காய் கவர் தன்மையதாகும். பொருட்சேர்க்கையினையே தேட்டமாக்கொண்டு வாட்டமில் உழைப்புடையோர்க்கும், அச் செல்வச் சேர்க்கைநெறியில், அறிவு இடையிடையே ஆற்றும் உதவி அறியற்பாலதே. இவ்வவனிமிசை பிறப்பெடுத்த எம் மனிதனும், தோன்றியக்கால்தொட்டு—மாளுமட்டும், உடலோம்புநெறியிலேனும், பொருள்கூட்டு நெறியிலேனும், அறிவாற்றவழியிலேனும், தெய்வமாபெருங்கதியிலேனும் உழைத்தே தீரவேண்டியுள்ளது. எதொன்றை மேற்கொளினும், அதனைச் சீருறநிறைவுறுத்தற்கு அறிவு, திறம்பெற்றுழைக்கவேண்டுவதாகிறது. ஆகலின், எவ்வித வாழ்வுகட்கும், நூதனச் செய்கைத் தோற்றங்கட்கும் அடிப்படையாக நின்றுதவுமிவ்வறிவினை வளர்த்தற் பொருட்டே கல்விமார்க்கம் கைக்கொள்ளவேண்டுவது சால அவசியமாம். அங்ஙனம் கொள்ளாதான் வாழ்வு இன்ப நனியில்லாததாகவேனும் துயரே பயப்பதாகவேனும் இருந்து தீரும். இதுகாறும் ஆய்ந்தவாற்றால் கிடைப்பது எம்மனிதனுக்கும் இயற்கையின் அறிவு வாய்ந்துள்ளதென்பதும், அவ்வியற்கையறிவினைக் கல்வித்துறையாற் பண்படுத்திப் பயன்பெறச் செய்யவேண்டுவது இன்றியமையாக் கடப்பாடென்பதுமாம்.

'தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு'

## (2) கல்விவகை.

படிப்பென்பது புத்தகங்களைக் கற்றல் மாத்திரமே அன்று. இப் படிப்பிலும் இயற்கைவழிப்படிப்பு, நூல்வழிப்படிப்பு, கேள்விவழிப் படிப்பு, அநுபவவழிப்படிப்பு முதலாய பலவகைகள் உள. இவை ஒவ்வொன்றும் படிப்பின் உருவாங் கலைமகட்கு உறுப்பெனத் தக்கனவாம். மேற்கூறியுள்ள ஒவ்வொரு வகையிலும் உட்சாகைகள் பலவுள. இச் சாகைகள் தாமும், தேசவகையானும், பாஷைவகையானும், இன்னம் பற்பல முகாந்தரங்களாலும் பலதரப்படும்.

### இயற்கைப்படிப்பு.

இனி இயற்கைவழியாற் பெறும் படிப்பினை ஒருங்கால், இயற்கையிலமைந்துள்ள எல்லாப்பொருட்களினது வடிவு, குணம், பயனுதி

வற்றை நேரிற்கண்டுணர்ந்து தெளிதலாம். கதிரவனின் தோற்றம் வடிவுமுதலியபற்றி ஒரு பிறவிக்குருடனுக்குப் பன்னிப் பன்னி உரைப்பினும், அதனியல்பினை நேரே கண்டனுபவித்தற்கிணையாமோ! 'நயகரா' நீர்வீழ்ச்சியைப்பற்றிய வருணனையைப் பல்காற்படித்துப் பிறர்க்குரைக்குந் திறன் எய்தினும், அதினின் காட்சி நம்மனத்தகத்து அழுந்தப்பதிந்திடல் ஒண்ணுமோ! ஒரு மலரின் நறுமணங் குறித்த சொற்களை உணரினும், அம்மணத்தின் நீர்மையினை நுகர்ந்துணராவழி என் பயன்விளையும். எட்டுச் சுரைக்காய் கறிக்காகாதவாறொக்கும் இயற்கைவழியுணரா எவ்வித அறிவும். இஃதொன்றமைந்த பிறவழிப் படிப்புக்கள் அமையாக்காலும் நெடுங்கேடில்லை. இவ்வொரு வழியினானே பற்பல பொருட்களையும் அவற்றின் புதுமைகளையும் நுணுகி நுணுகி ஆய்ந்து பேரும் புகழும் எய்தினோர் பலருளர். அன்னோர் இவ்வொரு துறையிலே செய்த ஆராய்ச்சியின் பயனாக நாம் தற்போது எண்ணிறந்த இன்பங்களையும், கஷ்டநிவர்த்திகளையும், சுகவாழ்வுகளையும் அநுபவிக்கின்றோம். இத்துறையாராய்ச்சி பல்கப்பல்க பின்வரும் பரம்பரையினர் இன்னும் பல்வகை யின்பவாழ்வுகளையும் எய்துவர். இவ்வழியகத்து எவரும் ஈடுபடாதிருந்திருப்பரேல், நாம் பெற்றுள்ள சுகங்கள் கனவிலும் எய்தற்கரிதாகியிருந்திருக்கும். இவ்வியற்கைப் படிப்பினும் பல்வகைப் பிரிவுகளுள. பஞ்சபூதங்களின் கூறுபாட்டாராய்ச்சி. பூகோள, வானப் பொருட்களின் ஆராய்ச்சி முதலிய பல்வகையுள. இவ்வித இயற்கை நுணுக்கங்களை ஆய்வதற்குப் பிறவழிப் பயிற்சிகள் அத்துணை அத்யாவசியமன்று. பிறவும் இதனோடு இணையுமேல் பொன்மலர் நாற்றமெய்தியமைபோலாம். இவ்வியற்கையாராய்ச்சி ஒரு சாரார்க்கேனும், ஒரு தேயத்தார்க்கேனும் உரிமையுடையதென்பதில்லை. எவராலும் பயிலக்கூடியதொன்றாம். எனினும், இவ்வழியில் பல்லோர் மனமும் படருதல் நிகழ்வதில்லை. ஒருசிலர்தாம் உழைக்க நேருகிறது. யாவர் மனமும் இதன்பால் திரும்பாமைக்கு, இதன்வயின் அவர்தம் நாட்டமின்மையே காரணமாகும். இந் நாட்டமும், முயற்சியும், மனவலிமையும் கிட்டுமேல் இயற்கையின் பல்வகைத்தாய புதைபொருட்கள் எளிதிற் புலனாகி ஈறிலின்பூட்டுமென்பதிலையமின்று. நீராவியின் வலிமையும், அதனைப் பலவேறுவழிகளிலாற்றுப்படுத்திப் பயன்றுய்க்குமதிர்ஷ்டமும், இயற்கையாராய்ச்சியாலன்றிப் பிறமுகத்தாற் கைகூடியதன்றே! இப் படிப்பும் எல்லையுற்றுப் பரந்து கிடக்கின்றது. இவ்வுண்மை இதனோடு கூடாடுபவராலேயே கண்டுணரற்பாலதாம். இம்மார்க்கத்தில் பலரும் கவனஞ் செலுத்திப் பாடுபடப் பாடுபட இயற்கைவலி சிறுகச் சிறுக வெல்லப்படுகின்றது. இயற்கையை வெல்வோன் தன்னையே வென்றவனாகிறான். தன்னை வெல்வதால் விளையும் பயன் ஈறிலா வின்பத்தாழ்ந்திடுதலாகும். இதுவரை இயற்கைக்கூறும் படிப்புப்பற்றி யாய்ந்தனம்; இனி நூல்வழியிற் படருவாம். (தொடரும்).



“அப்பா! இது நம்பத்தக்கதாயில்லையே. வர்த்தமானப் பத்திரிகைகளிலெல்லாம், சுனகபுரி தாண்டவம்ஐயரல்லவோ கொலைசெய்யப்பட்டாரென்று எழுதப்பட்டிருக்கிறது?” என்றார். சபேசன்,

“வாஸ்தவமே. ஆனால் கொலைசெய்யப்பட்டது தாண்டவம்ஐயரல்லவென்று நானும் நிச்சயமாய்ச் சொல்லமுடியாது. ஒருகால் அவரே மாய்க்கப்பட்டு, உம்மை இக்கதிக்குள்ளாக்கிய இந்த முத்துசாமி அய்யர் உயிருடனிருந்தாலுமிருக்கலாம். ஏனென்றால், அது தாண்டவம்ஐயரல்லவென்பதை அவ் வீட்டுச் சமையற்காரன் சொன்னதிலிருந்தும், இன்னும் பார்த்ததும் அவரேயென்று எண்ணத்தக்க மற்றொருவருண்டென்பதிலிருந்துமே, நாங்கள் அறிந்துகொண்டோம்.” என்றான். மணி அய்யர்,

“ஹா! தெய்வமே! வாஸ்தவத்தில் கொலைசெய்யப்பட்டது இந்த முத்துசாமி அய்யராயிருக்கும்பக்ஷத்தில் நான் மிகவும் சந்தோஷப்படுவேன். ஆனால் அது தாண்டவம் ஐயராயிருந்து, அப் பாவி உயிருடனிருப்பானாகில், அவனை விடேன்.” என்று மறுபடியும் சபேசனை நோக்கி, “ஆனால் இக் கொலையைச் செய்தது நானேயென்று நினைத்துக் கொண்டிருக்கிறாயோ? அப்பா! நீ இவ்விதம் தீர்மானித்தது நியாயமே. நீ இதுவரையில் பேசியதிலிருந்து, என் பெண்ணைப் பற்றிய சகலவிஷயங்களையும் நீ கண்டுபிடித்துவிட்டாயென்பதில் சந்தேகமில்லை. இன்னும், அக் கொலை நடந்ததினம் அவ் வீட்டில், அதே எண்ணத்துடன், நானும் இருந்தேனென்பதையும் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் அவனைக் கொன்றது நானல்ல. நான் அப் பாவியின்மேல் என் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளுமுன், வேறொருவன் அக் காரியத்தைச் செய்துவிட்டான். நான் என்னசொன்ன போதிலும் நீ நம்பமாட்டாயென்பது நிச்சயம். ஆனால் அதைப்பற்றி நான் எள்ளளவும் கவலைப்படவில்லை. இவ் விஷயம் வெளியாகுமானால், நான் உடனே கைதுசெய்யப்பட்டுக் கொலைக் குற்றத்திற்குரிய தண்டனையையடையக்

கூடும். அப்பா! இவ்வுலகில், இனி எனக்குக் காரியமில்லை. என் உயிர்நிலையே என்று நான் மதித்துவந்த என் குழந்தை அநியாயமாய்ப் போய்விட்டாள். ஆகவே, இது வெளியாகுமானால், நான் சாகவேண்டிவருமேயென்ற பயமும் கவலையும் எனக்குச் சிறிதளவுமில்லை.'' என்றார்.

இதைக் கேட்டதும், சபேசன், ஆச்சர்யத்தின் மிகுதியால், பேசவும் சக்தியற்றுக் கல்லாய்ச்சமைந்து நின்றான். ஏக் காரணத்தாலோ, அவன், மணி அய்யர் சொல்லுவது உண்மையேயென நினைத்தான். இன்னும், அவன், அக்கிராமத்திற்குள் நுழைந்ததும், அவரைப்பற்றிப் பலரிடம் விசாரித்ததில் அவர் பரமயோக்கியர் என்று கேள்விப்பட்டானாகையால், தான் பதட்டத்துடன் கண்டபடி பேசுவது பிசகென நினைத்துச் சாந்தமாய்,

"ஐயா! இதுவரையில் நீரே குற்றவாளியென்று நான் நினைத்துக்கொண்டிருந்தது வாஸ்தவம். ஆனால், தெய்வானுக்கிரஹத்தினால், ஒருவருடைய முகத்தோற்றத்திலிருந்தும் பேச்சிலுமிருந்தே, அவன், குற்றவாளியா அல்லது நிரபராதியா என்பதைக் கண்டறியும் சக்தி எனக்குக் கொஞ்சமுண்டாகையால், தற்சமயம் உம்மை நம்புகிறேன். ஆனால் உம்முடைய விஷயம் வெளியாகுமானால், நீர் நிரபராதியென்று ரூபித்துக்கொள்வது மிகவும் கஷ்டமென்பதை நீரே மறுக்கமுடியாது.'' என்றான். மணி அய்யர்,

''அப்பா! அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை என்று ஏற்கனவே சொல்லிவிட்டேன். அதிருக்கட்டும். அதைப்பற்றிப் பிறகு சாவகாசமாய்ப் பேசிக்கொள்ளுவோம். இப் பெண்மணியை நான் கெடுக்க முயன்றது தவறென்பது தற்சமயம் ரூபிக்கப்பட்டுவிட்டதால் முதலில் நான் அவளுடைய மன்னிப்பைக் கேட்கவேண்டும்.'' என்று மணி அய்யர், ஜானகியின் பக்கம் திரும்பி, கெஞ்சிய குரலில்,

''அம்மா! நீ என்னை மன்னிப்பாயென்று நான் எதிர்பார்ப்பது பிசகே. ஆனால் என் பரிதாப நிலைமையை நீ



அறியும்பக்ஷத்தில் உன் மனம் கண்டிப்பாய் இளகும்.'' என்று கூறிவிட்டு, மறுபடியும் சபேசனைப் பார்த்து,

''அப்பா! இதுவரையில் நான் என் மனச்சாக்ஷிக்கு விரோதமாய் ஒரு காரியத்தையும் செய்தவனல்ல. எனவே, இப் பெண்ணுக்கும் அப் பாபிக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்பதையறியவே, என் விசனத்திற்களவில்லை. இன்னும் இப் பாபத்தை நான் செய்யாமல் தடுத்து, தெய்வம்போல் நீ இவளைக் காப்பாற்றியதற்காக மிகவும் நன்றியறிவுள்ளவனாயிருக்கிறேன்.'' என்றார். பிறகு துரிதமாய் வெளியே சென்றவர், அங்கு வெளியில் இருட்டில் ஒருவர் நின்றுகொண்டிருப்பதைக் கண்டு, திடுக்கிட்டவராய், யாரென்று கேட்க, அம் மற்றொருவர், பயந்த குரலிலும், மரியாதையுடனும்,

''ஸ்வாமி! மன்னிக்கவேண்டும். நான் உங்கள் அடிமையாகிய ராமய்யன்.'' என்று விடையளித்தார். மணி அய்யர், திகைப்புற்று கலவரத்துடன்,

''நீர் இங்கென்னசெய்கிறீர்? நீர் எப்பொழுது திரும்பி வந்தீர்?'' என்று வினவ, சமையற்கார ராமய்யர், பணிவுடன்,

''முதலில் என்னை க்ஷமிக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கெஞ்சுகிறேன். தற்சமயம், தாங்கள் அப் பெண்ணைக் கெடுக்க முயன்றது தவறென்பதையறிந்துகொண்டுவிட்டதால், உள்ளதை ஒப்புக்கொள்வதில் அபாயமில்லை. ஸ்வாமி! நீங்கள் இவளைக் கெடுக்கமுடியாமற் போனதற்குக் காரணம் நானே. இன்று காலை நான் தங்களுடைய அநுமதிபெற்றுச் சென்றது, அதோ அப் பெண்மணியுடனிருக்கும் அவ் வாலிபனை அழைத்துவரும்பொருட்டே.'' என்று விடையளிக்கவே, மணி அய்யர்,

''ராமய்யரே! தற்சமயம் நீர் எனக்கு மிகவும் உதவி புரிந்ததாகவே கருதுகிறேன். சரி; இதைப்பற்றி மேலும் பேசவேண்டியதில்லை.'' என்றார்.

பிறகு நடந்த சிலவிஷயங்கள் நம் கதைக்கு அனாவசியமாகையால் விட்டுவிடுவோம். கடைசியில் மணி அய்யர், சபேசனை நோக்கி,

“அப்பா! நீ மிகவும் உதாரகுணமுள்ளவனாய்க் காணப்படுகிறாய். இன்னும், என்னைப்பற்றிய விஷயங்களெல்லாவற்றையும் நீ அறிந்தும், அவைகளை உடனே போலீஸாருக்கு அறிவித்து, என்னைக் கைதுசெய்விக்கும் எண்ணம் உனக்கில்லையென்றே தோன்றுகிறது. இது மிகவும் ஆச்சர்யப்படத்தக்க விஷயமே. ஆகவே, நான் எவ்விதத்திலாவது உனக்கு உதவிபுரியக் கூடுமானால் நான் தயார்.” என்றார். சபேசன்,

“ஐயா! நீர் எனக்கு உதவிபுரியக்கூடுமென்பது நிச்சயம். ஏனென்றால் வாஸ்தலத்தில் கொலைசெய்தவனை நீர் கண்ணால் பார்த்திருக்கிறீர். ஆகவே, அவனைக் கண்டுபிடிக்க உம்முடைய உதவி அவசியம் வேண்டும். தற்சமயம், இந்தத் தாண்டவமய்யருடைய மூத்த குமாரன் அதைச் செய்ததாகக் கைதுசெய்யப்பட்டிருப்பது உமக்குத் தெரிந்தே இருக்கும்.” என்றான். மணி அய்யர்,

“நன்றாய்த் தெரியும். இன்னும் நான் இதுவரையில் இந்தத் தாண்டவமய்யருடைய பெண்ணைப் பலவித கஷ்டங்களுக்குள்ளாக்கிவிட்டதால், அதற்குப் பதிலாக, அவளுடைய தமையனை இவ்வாபத்திலிருந்து மீட்க, நான் எவ்விதத்திலும் கடமைப்பட்டவன்.” என்றார். சபேசன்,

“மிகவும் சந்தோஷம்! அதுவுமன்றி, உம்முடைய பெண்ணைப் பற்றிய சகல விஷயங்களையும், பிறகு நீர் செய்த கார்யங்களையும் விவரமாய்ச் சொல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால், அதிலிருந்து தற்சமயம் என் மனதிலுள்ள பல சந்தேகங்களை நான் நிவிர்த்தி செய்துகொள்ளக்கூடும்.” என்றான். மணி அய்யர்,

“ஆகா! அவசியம் சொல்லுகிறேன். ஆனால் அதைச் சொல்லிமுடிக்க அதிக நேரம் ஆகும். இன்னும், நீ என்



வரலாற்றைக் கேட்டதும், இதுவரையில் நான் செய்த கார்யங்களெல்லாம் நியாயமென்றே நினைப்பாய். அப்பா! சென்ற மூன்று வருஷ காலம் வரையில், நான் இக் கிராமத்தில் பார்ப்பவர் பொறாமைப்படத்தக்கவிதம் என் மனைவியுடனும், என் குழந்தை மங்களத்துடனும், சந்தோஷமாய்க் காலம் கழித்துவந்தேன். அதன் முடிவில் என்னைச் சனியன் பிடித்துக்கொண்டான். திடீரென்று ஒருநாள் என் மனைவி பாம்பு கடித்து இறக்க, அவ் வருத்தம் சிறிது குறையுமுன், அச்சமயம் 15 வயதுள்ள என் பெண் தன் புருஷனை இழந்து வைதவ்யமடைந்தாள். எனவே, மனமுடைந்து, பிறர் எவ்வாறு தேற்றினும் தேறாமல், சரியான ஊணுறக்கமின்றிச் சுமார் ஒரு வருஷகாலம் உருகினேன். எனக்கு அப்பொழுது வயது முப்பத்தைந்தே ஆகையால், என் சிநேகிதர் பலர் என்னை மறுவிவாஹம் செய்துகொள்ளும்படி எவ்வளவோ சொல்லியும், எனக்கு மங்களத்தின் மீதிலிருந்த ஒரு அளவுகடந்த வாஞ்சையால், கண்டிப்பாய் மறுத்துவிட்டேன். வர வர, என் துக்கம் சற்றுக் குறையவே, அவளைப் பற்றி யோசிக்கலானேன். அதன் பலனாய் அவளை இரண்டு மூன்று வருஷ காலம் படிக்கவைத்துப் பிறகு எப்படியாகிலும் மறுவிவாஹம் செய்துவைத்துவிடுவதெனத் தீர்மானித்தேன். ஆகவே, அவளுடைய படிப்பை உத்தேசித்தும், இன்னும் நான் இக் கிராமத்தை விட்டு ஒரு பெரிய நகரத்தில் வசிப்பேனாகில், என் துக்கம் மேலும் குறையக்கூடுமென்று நம்பியும், சென்னைக்குச் சென்று மங்களத்தை ஒரு பெண் பாடசாலையில் சேர்த்தேன்.

அதுவரையில் நான் கிராமத்திலேயே வளர்ந்துவந்தவனாகையால், உலகத்தில் நடக்கக் கூடிய அக்கிரமங்களையும் அநியாயங்களையும் சற்றும் எதிர்பார்க்காமல், அவளைத் தன்னிஷ்டப்படி நடக்க இடங்கொடுத்துவிட்டேன். அதன் பலனாய், அவள் அப் பாபியின் மாயவலையிற் சிக்கியதை நீ அறிவாய். ஆனால் அதை நான் கடைசிவரையில் சந்தேகிக்கவில்லை. சென்ற சில மாதங்களுக்குமுன், பம்பாயிலிருந்து

என் ஸஹோதரன் ஒருவன் சீக்கில் அடிபட்டுச் சாகுந்தறுவாயிலிருப்பதாகச் செய்தி கிட்ட, உடனே சென்று அவனைப் பார்க்கவேண்டுமென்ற ஆவலினால் வயது முதிர்ந்த ஒரு கிழவியை மங்களத்துக்குத் துணைவைத்துவிட்டுப் பம்பாய் போனவன், அங்குக் கிட்டத்தட்ட நான்கு மாத காலம் தங்கிவிட்டேன். ஆனால் அவளைவிட்டுப் பிரிந்திருந்த ஒவ்வொரு நிமிஷமும் நான் அவளைப்பற்றி அடைந்த கவலைக்கு அளவில்லை. தவிர, அவள், அடிக்கடி, தான் மிகவும் சௌக்கியமாயிருப்பதாகவும், தன்னைப்பற்றி நான் சிறிதும் விசாரப்படவேண்டாமென்றும் கடிதமெழுதிக்கொண்டிருந்தாள்.

ஆனால் நான் திரும்பிவந்து அவளைப் பார்த்ததும் திடுக்கிட்டேன். ஏனென்றால் அவளுடைய முகம் வெளுத்தும், சரீரம் துரும்பாய் வாடியுமிருந்தன. அப்பொழுதும் என் மனதில் கவலை தோன்றியதேயொழிய, அவளுடைய நடத்தையைப்பற்றிச் சிறிதும் சந்தேகமுண்டாகவில்லை. ஆகவே, அன்புடனும், ஆவலுடனும், அதற்கு நான் காரணம் கேட்க, அவள் ஒன்றும் சொல்லாமல், என்னை இறுகக் கட்டிக்கொண்டு, தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள். ஒருகால், நான் அதுவரையில் அவளைத் தனிமையில் விட்டுப் போய்விட்டேனென்ற வருத்தத்தினாலிருக்குமென்று நினைத்துப் பலவித சமாதானங்களைச் சொல்லலானேன்.

இவ்விதம், இரவு 8மணிக்கு வீட்டிற்குள் நுழைந்தவன், என் சட்டைகளையும் களையாமல், 10மணிவரையில் நான் அவளுடனிருந்தும், அவள் தன் வாயைத் திறக்கவில்லை. வர வர, என் மனதில் பலவித சந்தேகங்களும், சொல்லமுடியாத ஒருவித பீதியும் தோன்றி என்னை வதைக்கலுற்றன. கடைசியில் அகாலமாய்விட்டதால், அவளைப் போய்ப் படுத்துக்கொள்ளும்படி நான் சொல்ல, என்னை விட்டுப்போக மனமில்லாதவள்போல், இரண்டடி தூரம் செல்வதும், பிறகு திரும்பியோடிவந்து, என்னை அணைத்துக்கொள்வதுமாயிருந்தாள். நான் ஒன்றும் தெரியாமல்



திகைப்புற்று அவளுடைய மனதிலிருப்பதை வெளியிடுமாறு மறுபடியும் கெஞ்சினேன். ஆனால் அவள் வாயைத் திறக்கும் வழியாயில்லை. நான் கெஞ்சக் கெஞ்ச, அவளுடைய வருத்தமும் குழப்பமும் அதிகரித்தன. இவ்விதம் மேலும் கால்மணி நேரம் கழிந்தது. பிறகு நான் மறுபடியும் பலவந்தம் செய்யவே, அரைமனதுடன் தன் அறைக்குச் சென்றாள். அவள் போனதும், மனோநிம்மதியற்றுச் சாப்பிடவும் மனமில்லாமல், படுத்துவிட்டேன். ஆனால் தூக்கம் வரவில்லை.

கடைசியில் பொழுது விடிந்ததும், ஆவலுடன் அவளுடைய அறைக்குச் சென்றேன். அப்பா! நான் அங்குக் கண்ட காட்சியை என்னென்று சொல்லுவேன். உள்ளே நுழைந்தவன் திடுக்கிட்டுப் பின்னிடைந்தேன். விலையுயர்ந்த கட்டிலும், அதன்மேல் வெல்வெட்டு மெத்தையும் தலையணைகளுமிருக்க, என் கண்மணி அலங்கோல நிலைமையில் தரையில் கிடந்தாள். உடனே பதறிய மனதுடன் ஓடி, அவளுடைய சரீரத்தைத் தொட்டதும், வீறிட்டலறினேன். ஏனென்றால் அது ஜில்லிட்டிருந்தது. அவள் இறந்துவிட்டாளென்பதைக் கண்டதும், சுமார் ஒருமணி சாவகாசம், தீயில் விழுந்த புழுவைப்போல் துடித்தேன். பிறகு திரும்பி அவ்வறையின் நாலாபக்கங்களையும் கவனித்தேன். ஒரு மேஜையின்மேல், ஒரு சிறிய சீசாவும், அதன் கீழ் ஒரு கடிதமும் இருப்பதைக் கண்டேன். அச் சீசாவின் மேல் ஒட்டப்பட்டிருந்த ஒரு சிவப்புக் கடிதத்தில் 'விஷம்' என்று எழுதப்பட்டிருந்தது. உடனே அவள் தற்கொலை செய்துகொண்டிருக்கிறாளென்பதை அறிந்து, அப்படி அவள் தன்னைத் தானே மாய்த்துக்கொள்ளக் காரணம் என்னவென்பதை அக் கடிதத்தில் எழுதிவைத்திருப்பாளென்று நம்பி அதை எடுத்து வாசித்தேன். அப்பா! அக் கடிதம் இன்னும் என்னிடமிருக்கிறது. இதோ கொண்டுவந்து தருகிறேன் நீயே வாசித்துப்பார்." என்று அவ்விடத்தைவிட்டுச் சென்று, 5 நிமிஷ நேரத்திற்குள்,

சபேசனிடம் ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்தார். அதில் கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டிருந்தது :—

“என் அருமைத் தந்தையே !

நீங்கள் இக் கடிதத்தை வாசிப்பதற்குள் நான் சவமாயிருப்பேன். இன்னும், நான் இக் காரியத்தைச் செய்துவிட்டதைக் கண்டதும், நீங்கள் படக்கூடிய அவஸ்தைகளை நான் அறியாதவளல்ல.

நான் மதியிழந்து, மோசம் செய்யப்பட்டு, படுகுழியில் விழுந்தவளென்பதை நீங்கள் நேற்று இரவே யூகித்திருப்பீர்கள். ஆனால் என்னை இக்கதிக்குள்ளாக்கிய பாபி யாரென்பது உங்களுக்குத் தெரியாது. அவனுடைய புகைப்படம் ஒன்று என் பெட்டியிலிருக்கிறது. அவன், ஜார்ஜ் டவுனில் ......அக்கிரஹாரத்தில், 25ம் நம்பர் வீட்டிலிருக்கிறான். அவனைப் பார்த்ததும், நான் அவன்மேல் எப்படிப் பிரியப்பட்டேனென்று நீங்கள் ஆச்சரியப்படக்கூடும். அப்பா! அப் பாபியின் பாசாங்கையும், நம்பத்தக்க டாம்பீகத்தையும் கண்டு மயங்கி, அவனுக்கு வயது 40க்குமேலானபோதிலும், அவன்மேல் மையல் கொண்டேன். ஆனால், அவன் சீக்கிரம் உங்களுடைய அநுமதியைப் பெற்று உலகமறிய என்னை விவாஹம்செய்துகொள்ளுவதாகச் சத்தியம் செய்தான். நானும் நம்பினேன். பிறகு நடந்த ஒவ்வொரு காரியத்தையும் இங்கு விவரமாய் எழுத என் மனம் இடங்கொடுக்கவில்லை.

கடைசியில், எனக்கு அவன்மீது சந்தேகம் உண்டாகவே, ஒருநாள் இரவு, அவன் வீட்டிற்குச் சென்று, அச் சமயம் நான் 6 மாதம் கர்ப்பமாயிருந்ததால், என் இரஹஸ்யம் வெளியாகுமுன், என்னை விவாஹம் செய்துகொள்ளும்படி கெஞ்சினேன். ஆஹா! அப் பாபி அன்று பேசிய பேச்சை நினைக்க என் உடல் இன்னும் பதறுகிறது. மோசம் போய்விட்டோமென்பதைக் கண்டதும், இனித் தற்கொலை செய்துகொண்டுவிடுவதென நிச்சயித்தேன்.



ஆனால் என் அருமைத் தோழி கமலம் என் ரகஸ்யத்தை எப்படியோ கண்டுபிடித்துவிட்டாள். அவள் எனக்குப் பல தேறுதல்களைச் சொன்னதுமன்றி நான் செய்த பாபங்களுக்குள்ள தண்டனைகளையடைய நான்மட்டும் பாத்தியப்பட்டவளென்றும், என் வயிற்றிலிருந்த சிசுவைக் கொல்லுவது பெரும் பாபமென்றும் எடுத்துக் காட்டவே, நான் அக்குழந்தை வெளியாகும்வரையில் உயிரை வைத்துக்கொண்டிருப்பதாக அவளுக்குச் சத்தியம் செய்துகொடுத்தேன். நல்லவேளையாய் நீங்களும் பம்பாய் போகவே, எவருமறியவகையின்றி ஒரு ஆண்குழந்தையைப் பெற்றேன். அது பிறந்து சுமார் 25 தினங்கள்வரையில், அதைப் பார்த்ததும், தற்கொலை செய்துகொள்ள மனந்துணியாமல் தயங்கினேன். அதன் முடிவில் இனிப் பயப்படுவது பிசகென நினைத்து, ஒருநாள் என்னைக் கெடுத்த அப்பாபிக்கு, அக்குழந்தையையாவது கொண்டுபோய் வளர்க்கும்படி, ஒரு கடிதம் எழுதினேன். இன்னும், அதுவரையில் என்னைத் தன் தமக்கைபோலவே பாவித்து எனக்கு உதவிபுரிந்துவந்த கமலத்தை உடனே வந்து என்னைக் காணும்படி மற்றொரு கடிதம் எழுதினேன்.

அன்று மாலை சுமார் 6 மணிக்கு, அச்சண்டாளன் நானிருந்த வீட்டிற்கு வந்தான். அவன் உடனே அக்குழந்தையை எடுத்துப் போகவேண்டுமென்றும், மறுக்கும் பக்ஷத்தில் எதுவந்தபோதிலும் சரியென்று அவனுடைய அயோக்கியத்தனத்தை வெளியாக்கி அவனை அவமானப்படுத்துவேனென்றும் பயமுறுத்தினேன். ஆனால், அவன், அதைச் சற்றும் லக்ஷியம் செய்யாமல், கலகலவென்று நகைத்துவிட்டுப் பரிஹாசக்குரலில்,

“வண்டி! என்னை வெருட்ட உன்னால் முடியுமோ? சீச்சீ! வெட்கமில்லாத நாயே! என்னை யாரென்று நினைத்துக்கொண்டாய்? அடியே! இக்குழந்தை உனக்குப் பெரிதேயொழிய எனக்குப் பெரிதன்று. இன்னும் நீ தற்கொலை செய்துகொள்ளப்போகிறாயே யென்று கவலை

யும் எனக்கில்லை. உன்னிஷ்டப்படி செய்யலாம். ஆனால் நீ இறந்த பிறகு உன் குழந்தை உயிருடனிருப்பது பிசகு. ஆகையால், அதை முதலில் கொன்றுவிடுவது நலம். ஆஹா! என்னடி திடுக்கிடுகிறாய்? இந்தா! உனக்காக, அக்கார்யத்தை நானே செய்துவிடுகிறேன். இக்குழந்தையைக்கொண்டல்லவோ நீ என்னை அவமானத்திற்கும் கஷ்டங்களுக்கும் உள்ளாக்கப் பார்க்கிறாய்? இதோ பார்.” என்று சற்றும் கைகூசாமல், தூங்கிக்கொண்டிருந்த அக்குழந்தையையெடுத்து, ஒருநிமிஷநேரத்திற்குள் அதன் கழுத்தை முறித்து என்மீது எறிந்தான். அச்சமயம், என் மனம் பட்டபாட்டை என்னால் சொல்லமுடியாது. வருத்தம் தாங்காமல், ‘ஓ’ என்று கத்தி, வேரற்ற மரம்போல் தரையில் விழுந்து மூர்ச்சையானேன். நான் மறுபடியும் என் சுயநினைவை யடைந்தபொழுது, அப்பாபி, அவசரத்துடன்,

“அடியே! நான் சொல்வதுபோல் நீ செய்யவேண்டும். சற்றுநேரத்திற்கு முன்பு கமலம் என்ற உன் தோழி ஒருத்தி இங்கு வந்தாள். உனக்கு ஜன்னி கண்டிருப்பதாகவும், உடனே ஒரு டாக்டரை யழைத்துவரும்படியும் சொல்லி அவளை அனுப்பிவிட்டேன். அவள் திரும்பி வருவதற்குள் நாம் போய்விடவேண்டும். வெளியில் வண்டி தயாராயிருக்கிறது. நீ ஏதேனும் வம்பு செய்தால், நீ திருட்டுத்தனமாய் பிள்ளையைப் பெற்றுவிட்டு, அதைக் கொன்றுவிட்டதாக உடனே போலீஸ்காரர்களை அழைத்து உன்னைக் கைதுசெய்யச் சொல்லுவேன். மரியாதையாய் எழுந்துவந்து வண்டியிலேறிக்கொள்.” என்று பயமுறுத்தவே, நான் நடுங்கிவிட்டேன். வேறு எதையும் செய்யவும், அப்பாபியை எதிர்க்கவும், சக்தியற்று அவனுடன் வெளியே சென்று அங்குக் காணப்பட்ட ஒரு வண்டிக்குள் உட்கார்ந்ததும் அது உடனே புறப்பட்டது. அது கொஞ்ச தூரம் சென்றதும், என் தோழி கமலம் அவ்வீட்டிற்குள் நுழைவதைக்கண்டு, அவள் என்னைக்காணாமலும் கொல்லப்பட்டுக்கிடந்த குழந்தையைக் கண்டும் கவலைப்பட்டுத் திகிலடைவாளென்று நினைத்து அவளைக் கூப்பிட வாயைத்



188774

திறந்தேன். ஆனால் அச்சண்டாள[illegible] நினைப்படி [illegible] செய்யாவண்ணம் அதைத் தன் கையால் [illegible] கடைசியில் வண்டி நம் வீட்டிற்கு எதிரில் நின்றதும்,

“அடியே! பேசாமல் இறங்கி உள்ளே போய்விடு. ஆமாம். ஜாக்கிரதை. நீ ஏதேனும் விஷமம் செய்தால் உன்னைத் தொலைத்துவிடுவேன்.” என்று சொல்லிவிட்டுத் துரிதமாய்ப் போய்விட்டான்.

அப்பா! அன்று இரவு முழுமையும் நான் பட்ட கஷ்டம் தெய்வத்துக்குத்தான் தெரியும். நல்லவேளையாய் நான் மிகவும் சிரமத்துடன் வாங்கி வைத்திருந்த விஷம் என் மடியிலேயே இருந்தது. உடனே தற்கொலை செய்துகொள்ள நிச்சயித்தேன். ஆனால், இவ்விதம் என்னை மோசம் செய்த அப்பாபியின்மேல் எப்படியாகிலும் என் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ள நினைத்தேன். அதுவுமன்றி, எவ்வளவோ நான் முயன்றும், உங்களை மறுபடியும் ஒருதரம் பார்க்காமல், சாக என் மனம் இடங்கொடுக்கவில்லை. இன்னும் நீங்கள் இரண்டு நாட்களுக்குள் திரும்பி வந்துவிடுவதாக அன்று காலை கடிதம் வந்திருந்ததால், அதுவரையில் காத்திருந்து, பிறகு தற்கொலை செய்துகொள்ளத் தீர்மானித்தேன்.

என் அருமைத் தந்தையே! இரண்டுமணி நேரத்திற்கு முன் நான் உங்களை யணைந்துகொண்டு அழுதபொழுது என் மனம் பட்டபாட்டை எப்படி எடுத்தெழுதுவேன். அப்பா! இனி நான் எழுதிக்கொள்ளவேண்டியது ஒன்றுமில்லை. நான் செய்த கார்யத்திற்கு என்னை மன்னிக்குமாறு மன்றாடுகிறேன்.

ஆனால் நான் உங்களைக் கேட்டுக்கொள்ளுவது ஒன்றுண்டு. அதாவது, நீங்கள், என்னை இக்கதிக்குள்ளாக்கிய, அச்சண்டாளனை இலேசில் விடக்கூடாது. அவனை உங்களால் முடிந்த வரையில் தண்டிப்பதையும் தவிர, அவன் இனி என்னைப் போன்ற பேதைப் பெண்களைக் கெடுக்காவண்ணம் செய்துவிடவேண்டும். கடைசியில், நீங்கள் எப்

A-F-F331



பொழுதாவது என் தோழி கமலத்தைக் காண நேரிட்டால் நான் அவளைப் பார்க்காமல் தற்கொலை செய்துகொண்டதை மன்னிக்கும்படி கேட்டதாகச் சொல்லவும்.——மங்களம்.''

இக்கடிதத்தை வாசிக்கும்பொழுது, அவனையறியாமலே சபேசனுடைய கண்களிலிருந்து நீர் வெளிக்கிளம்பியது. அவன், மணி அய்யரை நோக்கி,

"தற்சமயம், என் மனதும் பதறுகிறது. ஆனாலும், இக் கலியுகத்தில் இப்பேர்ப்பட்ட சம்பவங்கள் மிகவும் சகஜமாகையால், முடிந்தவரையில் உம்முடைய மனதைத் தேற்றிக்கொள்ளுவதே நலம். மேலும் நான் தங்களுக்கு தேறுதல் சொல்லச் சக்தியற்றவனாயிருக்கிறேன்.'' என்றான்.

இதற்குள் மணி அய்யர், வருத்தம் தாங்காமல், சிறு குழந்தையைப்போல் தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்தார். நடுவில், "ஆ! என் செல்வமே! ஆ! என் உயிர் நிலையே!'' என்று சொல்லொணா விசனத்துடன் பெருமூச்செறிந்தார். அக் காக்ஷியைக் கண்ட சபேசனுடைய மனம் உருகியதென்றே சொல்லவேண்டும். அவன், அவரைத் தன்னால் முடிந்தவரையில் சமாதானப்படுத்தி,

"ஸ்வாமி! நான் உங்களுக்குப் புத்திமதி சொல்லுவது அழகல்ல. ஆனாலும்,'' இனி நாம் செய்யவேண்டிய கார்யங்களை உத்தேசித்துத் தைர்யத்தைக் கைவிடாமலிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.'' என்றான்.

கடைசியில், மணி அய்யர், மிகவும் சிரமத்துடன் தன் வருத்தத்தை அடக்கிக்கொண்டு, "அப்பா! இனி ஒரு நிமிஷ நேரமும் நான் உயிர்வைத்துக்கொண்டிருக்க நியாயமில்லை. ஆனாலும், நான், தவறுதலாக, இப் பெண்ணைக் கெடுக்க முயன்றுவிட்டதால், அப் பாபத்திலிருந்து என்னை மீட்டுக்கொள்ள, என்னால் முடிந்தவரையில் இவளுடைய தமயனைக் காப்பாற்ற ப்ரயத்தனப்படவேண்டும். சரி; மேலே நான் செய்த கார்யங்களைச் சொல்லுகிறேன் கேள்.—'' என்று அவர் மேலே பேசுமுன், சபேசன், மரியாதையுடன்,



"முதலில், நான் கேட்கும் ஒரு கேள்விக்கு நீங்கள் விடையளிக்கவேண்டும். மங்களம் இக் கடிதத்தில் கண்டிருக்கும் அவளுடைய தோழியாகிய கமலம் என்ற பெண்ணை நீங்கள் பார்த்திருக்கிறீர்களோ?'' என்று வினவினான். மணி அய்யர்,

"நன்றாய்த் தெரியும். அவள் அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வருவதுண்டு. இன்னும் அவள் மிகவும் நற்குணவதியாகையால் நான் அவளையும் என் குழந்தைபோலவே பாவித்துவந்தேன். ஏன்? உனக்கு அவளைத் தெரியுமோ?'' என்றார். சபேசன்,

"தெரியும். அவள் தற்சமயம் பெரிய ஆபத்தில் சிக்கிக்கொண்டிருக்கிறாள். அவள் அக் குழந்தை கொல்லப்பட்டதினம் அவ் வீட்டிற்குப் போனாள் என்பது இக் கடிதத்திலிருந்தே வெளியாகிறது. இன்னும் சந்தேகிக்கத்தக்க சந்தர்ப்பத்தில், அவள் ஒரு துப்பறிபவனால் கண்டுபிடிக்கப்பட—'' என்று மேலே பேசுமுன், மணி அய்யர், வியப்புற்று, அவசரத்துடன்,

"என்ன? ஆனால் போலீஸார், அக் குழந்தையைக் கொன்றது கமலமென்று சந்தேகப்படுகிறார்கள். அப்பா! அவளை நிரபராதியென்று ரூபிக்க இக் கடிதம் ஒன்றே போதுமே?'' என்றார். சபேசன்,

"வாஸ்தவம். அவளைப் போலீஸார் சந்தேகிப்பதையும் தவிர, அந்த ரஹஸ்யத்தை அறிந்த ஒரு அயோக்கியன், அவளைத் தன் மனைவியாயடையாதபக்ஷத்தில், அவளை உடனே போலீஸாரிடம் காட்டிக்கொடுத்துவிடுவேன் என்று பயமுறுத்துகிறான். இன்னும் அவன் அப் பெண்ணின் தந்தை நாளைக் காலை 8மணிக்குள் தனக்கு அவளை விவாஹம் செய்து கொடுப்பதாகச் சத்தியம் செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டிருப்பதால், நாம் அதற்குள் கனகபுரிக்குப் போகவேண்டும்.'' என்றான். மணி அய்யர்,

து.

"நல்லவேளையாய் அதை இப்பொழுதே சொன்னாயே. அப்பா! முதலில் நாம் அவளைக் காப்பாற்றவேண்டும். சரி; இப்பொழுது மணி 12க்கு மேலாய்விட்டதால், காலை 6மணி வரையில் நமக்கு வேறு வண்டியில்லை. ஆனால் நாம் அதில் போனாலும் 8மணிக்குள் கனகபுரிக்குப் போய்விடலாம். இரு; என் வண்டிக்காரனுக்குச் சொல்லியனுப்புகிறேன்." என்றார்.

---

## அத்தியாயம் 14.

---

இவ்விதம் அம் மூவரும் மறுநாட்காலை கனகபுரிக்குப் போவதென்று தீர்மானிக்கப்பட்டது. பிறகு மணிஅய்யர், மேலும் தம் கதையைச் சொல்லத் தொடங்கினார்.

"அப்பா! இக் கடிதத்தை வாசித்ததும் எனக்குண்டான ரௌத்திராகாரத்தையும், நான் அனுபவித்த எண்ணிறந்த உணர்ச்சிகளையும் என்னால் வர்ணிக்க முடியாது. அச்சமயம், என் எதிரில் கிடந்த என் குழந்தையின் சவம் உயிருடன், "அப்பா! மறக்கவேண்டாம். அப் பாபியை விடாதீர்கள்." என்று கதறுவதுபோலிருக்க, எல்லாவற்றையும் மறந்தேன். அச் சண்டாளன் எங்கு ஓடி ஒளிந்துகொண்டபோதிலும், கண்டுபிடித்து அவனைப் பலவித நகர வேதனைகளுக்குள்ளாக்கி, கடைசியில் கொன்றுவிடுவதுமன்றி, அவனுக்கும் பருவமடைந்த பெண்ணிருக்கும் பக்ஷத்தில் அவளுடைய கற்பையும் அழித்துவிடுவதென்று சபதம் செய்துகொண்டேன்.

பிறகு, என் நண்பராகிய ஒரு டாக்டரின் உதவியைக் கொண்டு, அது தற்கொலை என்பது வெளியாகும் வண்ணம் செய்து, சீக்கிரம் சவத்தைக் கொளுத்திவிட்டேன்.

அதுவரையில், எனக்கு, அப் பாபி யாரென்பதும் அவனுடைய பெயரும் தெரியாதாகையால், ஸ்மசானத்திலிருந்து திரும்பி வந்ததும், மங்களத்தின் பெட்டியைத்



திறந்து, அதிலிருந்த அப் பாபியின் புகைப்படமொன்றை எடுத்துக்கொண்டேன். இன்னும் என் பெண் எழுதிவைத்திருந்த கடிதத்தில், அவன் வீட்டு விலாஸமும் இருந்ததால், அன்று மாலை சுமார் 5மணிக்கு, நான் அப்பக்கம் சென்றபொழுது, அவ்வீட்டுத்திண்ணையில் ஒருவர் உட்கார்ந்துகொண்டிருந்தார். இப்பொழுது, அவர் வக்கீல் தாண்டவம் ஐயர் என்பதில் சற்றும் சந்தேகமில்லை. அச்சமயம் அவ்வீட்டின் வெளிக்கதவு பூட்டப்பட்டிருந்ததால், முத்துஸாமி அய்யர் வெளியே போயிருந்தாரென்றும், தாண்டவம்ஐயர் அவரைப் பார்க்கும்பொருட்டுக் காத்துக்கொண்டிருந்தாரென்றும் தோன்றுகிறது. ஆனால் நான் அவரே அச்சண்டாளனென நினைத்து, சற்றுநேரத்திற்கெல்லாம், அவர் எழுந்து அரண்மனைக்காரத்தெருவை நோக்கி நடக்கவே, நானும் பின்பற்றிச் சென்றேன். அவர் கொஞ்சதூரம் போனதும், வழியில் சந்தித்த ஒருவருடன் 5 நிமிஷநேரம் பேசிக்கொண்டிருந்தார். நான் ஒரு மறைவில் நின்றுகொண்டு, என்வசமிருந்த புகைப்படத்தையும், அவரையும் பலதரம் ஒத்திட்டுப் பார்த்தேன். சிறிதும் வித்தியாசமில்லை. அச்சமயம், அவர் பேசிக்கொண்டிருந்த அம்மற்றொருவரிடம் தந்திரமாய் விசாரிக்கும்பக்ஷத்தில், அவருடைய பெயரையும் இதர விஷயங்களையும் அறிந்துகொள்ளக்கூடுமென நம்பி, அவ்விருவரும் பிரிந்ததும் அம்மற்றொருவரை யணுகி, அவருடன் பேசவாரம்பித்தேன். அதன் பலனாய், அவர் கனகபுரி தாண்டவம்ஐயர் என்றும், அவருக்கு 16வயதானபோதிலும் விவாஹமாகாத ஒரு பெண்ணுண்டென்பதையும் தெரிந்துகொள்ளவே, முதலில் அப் பெண்ணின்மேல் என் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளத் தீர்மானித்தேன். அப்பா! என் கோபத்தின் மிகுதியால் விஷயங்களை நான் நன்றாய் ஆராய்ந்து பார்க்கவில்லை. கனகபுரியில் வக்கீலாயிருப்பவர், சென்னையிலிருந்த என் பெண்ணை எப்படிக் கெடுத்திருக்கமுடியுமென்ற சந்தேகம் என் மனதில் தோன்றவில்லை. ஆனால், அப்படியே அது பட்டிருந்தபோதிலும், அவர் அடிக்கடி சென்னைக்கு வருது.

வராயிருந்து, அதற்காக அங்கும் ஒரு வீட்டை வைத்துக் கொண்டிருக்கலாமென்றும், அச்சமயங்களில், என் பெண்ணைச் சந்தித்து, அவளை மயக்கி, அவளுடைய நட்பை அடைந்து, கெடுத்திருக்கக் கூடுமென்றே தீர்மானித்திருப்பேன்.

நிற்க, அம் மற்றொருவருடன் நான் பேசிக்கொண்டிருக்கையில், தாண்டவம்ஐயரை நழுவ விட்டுவிட்டேன். இருந்தபோதிலும், அவர் கனகபுரியில் மிகவும் பெயர் பெற்ற வக்கில் என்று அறிந்துகொண்டதால், அவ்வூரில் அவரை சிரமமின்றிக் கண்டுபிடிக்கமுடியுமென்ற நம்பிக்கையுடன் போய்விட்டேன். மறுதினமே, சென்னையில் அவ்வீட்டைக் காலிசெய்துவிட்டு, சாமான்களுடன் இக் கிராமத்திற்கு வந்துசேர்ந்தவன், உடனே மறு ரயிலில் கனகபுரிக்குச் சென்று, தாண்டவம்ஐயருடைய வீட்டையும், அவருக்குப் பருவமடைந்த ஜானகி யென்ற இப் பெண்ணுண்டென்பதையும் தெரிந்துகொண்டேன். பிறகு இப்பேர்ப்பட்ட கார்யங்களை தங்களுடைய தொழிலாய்க் கொண்ட இரு முரடர்களின் உதவியால், இவளை கனகபுரி புதுச்சாலையிலிருக்கும் அவ்வீட்டிற்கு நான் அடித்துக்கொண்டு போனதையும், ஆனால் நான் அவளைக் கெடுக்குமுன் நீ வந்து அவளைக் காப்பாற்றியதையும், நான் உனக்குச் சொல்லவேண்டியதில்லை.

அப்பா! அதுவரையில், நான் இத்தகைய கார்யங்களைச் சுவப்பனத்திலும் கண்டறியாதவனாகையால், அவ்விதம் நான் அபஜயமடைந்ததும், எனக்குண்டான பயமும் படபடப்பும் அடங்க, இரண்டுவாரங்களுக்கு மேலாய்விட்டன. பிறகு, இவளைக் கெடுப்பது முடியாத கார்யமென நினைத்து, தாண்டவம்ஐயரைக் கொல்லும் வழியைத் தேடலானேன். இக்கார்யத்திலும் பிறரைச் சேர்த்துக்கொள்ளுவது பிசகெனப் பயந்து, தனிமையில் மறுபடியும் கனகபுரிக்கு வந்துசேர்ந்தேன். இது நடந்து கிட்டத்தட்ட மூன்று வாரங்களிருக்கலாம். அச்சமயம் இரவு 8 மணி



இருக்கும். நான் தாண்டவம்ஐயருடைய வீட்டிற்குள் நுழைந்து அவரைக் கொல்லுவது சாத்தியமல்லவென்று நினைத்து, அவர் இருள்சூழ்ந்த ஒரு இடத்தில் தனிமையில் மாட்டிக்கொள்ளும்பொழுது, திடீரென்று அவர்மீது பாய்ந்து, என்னுடன் தயாராய்க் கொண்டுவந்திருந்த கத்தியால் குத்திக் கொல்லத் தீர்மானித்தேன். இன்னும் நான் அவரைப்பற்றி விசாரித்ததிலிருந்து, அவர் தினந்தோறும் இரவு 9மணிவரையில் நகரமண்டபத்திலிருப்பது வழக்கமென்று அறிந்துகொண்டேனாகையால், 8½மணிக்குள் அங்குச் சென்று, அங்கிருந்த ஒரு வேலைக்காரனிடமிருந்து அவர் உள்ளே இருப்பதாயறிந்து, அவரை எதிர்பார்த்த வண்ணம் ஒரு மறைவில் காத்துக்கொண்டிருந்தேன்.

அப்பா! இதற்குள், பயத்தாலும் அதைர்யத்தாலும் என் சரீரம் முழுமையும நடுங்கிக்கொண்டிருந்தது. நிற்கவும் சக்தியற்று, அப்படியே தரையில் உட்கார்ந்துவிட்டேன். ஆனால் அரைமணி நேரத்திற்கெல்லாம், தாண்டவம்ஐயர் வெளியேவர, அவரைக் கண்டதும், ஆரம்பத்தில் எனக்குண்டான அதே ரௌத்திராகாரமும் ஆவேசமும் திரும்பி, எதையும் செய்யத் தைர்யமும் பலமும் அடைந்தேன்.

நிற்க, வெளியேவந்த தாண்டவம்ஐயர் தம்முடனிருந்த ஒரு நண்பருடன் பேசிக்கொண்டே நடக்க ஆரம்பித்தார். அவர்களைக் கண்டதும், சமீபத்தில் நின்றுகொண்டிருந்த இரு இரட்டைமாட்டு வண்டிகள் மெல்ல அவர்களைப் பின்பற்றிச் சென்றன. ஆனால், தாண்டவம்ஐயர், அவைகளில் ஒன்றை அணுகி, அதிலிருந்த வண்டிக்காரனிடம்,

"அடே! பொன்னம்பலம்! நான் அவசர கார்யமாய் இவருடைய வீட்டிற்குப் போகவேண்டும். திரும்பிவர, மணி 10க்கு மேலாகுமாகையால் நீ அதுவரையில் காத்திருக்கவேண்டாம். நான் திரும்பி வீட்டிற்கு நடந்துபோய்விடுகிறேன்." என்று சொல்லவே, அவ் வண்டிக்காரனும். வண்டியை ஓட்டிக்கொண்டுபோய்விட்டான். உடனேயாது.

இருவரும் மற்றொருவண்டியிலேறி உட்கார்ந்துகொள்ள அதுவும் வேகமாய்ப் புறப்பட்டது. இதைக் கண்ட நான், மேலே என்ன செய்வதென்று அறியாமல், திகைத்து நின்றேன். பிறகு யோசிப்பதில் பிரயோஜனமில்லை என்று, அவர்கள் என்னைப் பார்க்கமுடியாத வகையில், அவ் வண்டியைப் பின்பற்றி ஓடினேன்.

பிறகு நடந்தவைகளை விவரித்துச் சொல்லவேண்டியதில்லை. கடைசியில் சுமார் 10½ மணிக்கு, தாண்டவம்ஐயர், இருள் சூழ்ந்ததும், அதிக ஜனப்பழக்கமில்லாததுமான ஒரு சந்தில், என்னிடம் மாட்டிக்கொண்டார். உடனே, நான் அவர்மீது பாய்ந்து 'ஹா! என் பெண்ணைக் கெடுத்த சண்டாளா! இதோ உன்னைக் கொன்றுவிடுகிறேன்.'' என்று சீறியவண்ணம், மடியிலிருந்த கத்தியை எடுத்து, அதை அவருடைய மார்பில் பாய்ச்சும் தறுவாயில், அவர் எப்படியோ திமிறிக்கொண்டு ஓடிவிட்டார்

எனவே, அன்றும் அபஜயமடைந்தேன். அதனாலுண்டாகிய பயமும் படபடப்பும் அடங்க மேலும் சில தினங்களாய்விட்டன. பிறகு, மறுபடியும் யோசிக்கலானேன். அதன் பலனாய், எப்படியாகிலும், அவருடைய வீட்டிற்குள் நுழைந்து, அவர் தூங்கும்பொழுது, அக்காரியத்தைச் செய்ய நிச்சயித்தேன். இவ்வுத்தேசத்துடன், மறுபடியும், கொலை நடந்த தினம் ஜனகபுரிக்கு வந்துசேர்ந்தேன். அச்சமயம் மாலை மணி 5 இருக்கும். நல்ல வெளிச்சத்தில் அவருடைய வீட்டின் அமைப்பையும், எளிதில் பிறர் அறியாமல் அதற்குள் நுழைவது சாத்தியமாவென்பதையும் பார்க்கும்பொருட்டு அவ் வீட்டின் சமீபம் சென்று, சுமார் கால்மணி நேரம் வட்டமிட்டுக்கொண்டிருந்தேன். பிறகு, ஒருவித தீர்மானத்துடன், இருளை ஆவலுடன் எதிர்பார்த்தவனாய், அவ்வூர் முழுமையும் அலைந்துகொண்டிருந்தேன். கடைசியில் மணி 8 ஆகவே, எல்லாவற்றிற்கும் சாப்பாட்டை முடித்துக்கொள்ளுவது அவசியமெனக் கருதி, பெரிய [illegible]விலிருந்த ஒரு ஹோட்டலுக்குள் நுழைந்தேன். பிறகு, [illegible]களைச் சுத்தம் செய்துகொண்டு சாப்பாட்டறைக்குள் நுழைந்தவன் திடுக்கிட்டேன். ஏனென்றால், தாண்டவம்ஐயரும் அங்குச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். அது, இப்பொழுது, தாண்டவம்ஐயரல்ல என்பதில் ஐயமில்லை. அது அப் பாபி முத்துசாமி அய்யர் என்பது நிச்சயம். தம் வீடிருக்கும்பொழுது, தாண்டவம்ஐயர், ஏன் ஹோட்டலில் சாப்பிடவேண்டும்?



நிற்க, அவனைக் கண்டதும், மறுபடியும் என் ஹிருதயம் துடித்தது. நான் அறியாமலே, என் வலதுகை என் இடுப்பிலிருந்த கத்தியை நோக்கிச் சென்றது. ஆனால், அங்கு என் மனோநிலைமையைக் காட்டிக்கொள்வது பிசகென்று நினைத்து, சிரமத்துடன் அதை மறைத்துக்கொண்டு, அவன் பக்கத்தில் காலியாயிருந்த ஒரு இலையின்முன் உட்கார்ந்துகொண்டேன். நல்லவேளையாய், அச்சமயம், நான் ஒரு வயதுமுதிர்ந்த கிழவரைப்போல் வேஷம் அணிந்துகொண்டிருந்ததால், அப் பாபி என்னை யாரென்று சந்தேகிக்கவில்லை. அதற்குள் அநேகமாய் அவன் தன் சாப்பாட்டை முடித்துக்கொண்டு எழுந்திருக்கும் தறுவாயிலிருந்தான். நான் கடைக்கண்ணால் அவனைக் கவனித்தவண்ணமிருந்தேன். இப்படியிருக்கையில் ஒரு அதிசயமான சம்பவம் நடந்தது. அதாவது, கடைசியில் அவன் ஆபோஜனம் வாங்கிக்கொண்டு எழுந்திருக்கும்பொழுது, அவனுடைய இடுப்பிலிருந்து ஒரு கடிதம் கீழேவிழ, அதைப் பிறர் அறியாதவகையில், என் வசமாக்கிக்கொண்டேன். அவன் கொல்லைப்பக்கம் சென்றதும், மேலும் நான் சாப்பிட்டுக்கொண்டிருப்பது பிசகென நினைத்து, எழுந்துவிட்டேன். நான் கைகளை அலம்பிக்கொண்டு, மறுபடியும் முன்கட்டை அடையும்பொழுது, அவன் அங்கு உட்கார்ந்துகொண்டு வெற்றிலை போட்டுக்கொண்டிருந்தான். எப்படியும் அவன் எழுந்திருக்க 5 நிமிஷ நேரமாவது ஆகுமென்று நம்பி, வாசலில் தொங்கிக்கொண்டிருந்த ஒரு விளக்கினருகிற் சென்று, அக் கடிதத்தை எடுத்து வாசித்துப் பார்த்தேன். அதில் ''நீர் மிகவும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். அவ்வீட்டில் இருக்கும்வரையில் வாயைத் திறக்கக்கூடாது.

நான் சொன்னபடி அவைகளை எடுத்துக்கொண்டு, மட்டத்தைத் தெருவில் நீர் சொன்ன வீட்டில் எனக்காகக் காத்துக்கொண்டிரும். நான் அநேகமாய் 12மணிக்குள் வந்துவிடுகிறேன். ஆமாம்! உஷார்." என்று எழுதப்பட்டிருந்தது. இதைவாசித்ததும் எனக்குண்டான ஆச்சர்யத்தை நான் சொல்லவும் வேண்டுமோ?

பிறகு, கால்மணிநேரத்திற்கெல்லாம் அவன் வெளியே வர, நான் ஒரு மூலையில் எதையும் கவனிக்காதவன்போல் உட்கார்ந்துகொண்டிருந்தேன். அப்பொழுது அவனுடைய கையில் ஒரு துணிமூட்டை இருந்தது. சற்றும் தாமதிக்காமல் அவன் அந்த ஹோட்டலுக்குப் பக்கத்திலிருந்த ஒரு கடையின் திண்ணைமேலேறி உட்கார்ந்துகொண்டான். பிறகு, தான் அச்சமயம் அணிந்துகொண்டிருந்த சட்டைகளையும் வேஷ்டிகளையும் களைந்துவிட்டு, அம்மூட்டையிலிருந்த துணிகளை உடுத்திக்கொண்டான். அவ்விடம் இருட்டாயிருந்ததுமன்றி, அது மிகவும் சாதாரணமான காரியமாகையால், ஒருவரும் அதைக் கவனிக்க நியாயமில்லை. பிறகு, தான் களைந்த துணிகளைச் சுருட்டி ஒரு மூலையில் வைத்துவிட்டு, திண்ணையைவிட்டிறங்கித் துரிதமாய் நடக்க ஆரம்பித்தான். நானும் அவனைப் பின்தொடர்ந்தேன். 10நிமிஷநேரத்திற்கெல்லாம் நகரமண்டபம் சமீபம் வந்து சேர்ந்தோம். அங்குக் காணப்பட்ட சில வண்டிகளைநோக்கி நடந்து, அதில் ஒன்றில் அவன் ஏறி உட்கார்ந்துகொண்டதும், அது உடனே புறப்பட்டது. மேலும் கால்மணிநேரத்திற்குள், பட்டாபிராமன் தெருவை அடைந்தோம். அச்சமயம் மணி சுமார் 10 இருக்கும். நான் எதிர்பார்த்தபடியே வண்டி தாண்டவமையருடைய வீட்டிற்கெதிரில் நிற்க அவன் இறங்கி உள்ளே சென்றான். உடனே வண்டி போய்விட்டது. அகாலமாய்விட்டதால் அத் தெருவில் ஜனப்பழக்கமே இல்லாமல் ஒரே நிர்சப்தமாயிருந்தது. உடனே என் மனதில் பளீரென்று ஒரு யோசனை தோன்றியது. இன்னும், தாண்டவமையருடைய வீடு திறந்தேயிருந்ததால், பதுங்கியவண்ணம், பூனைபோல் முன்



சென்று, அதற்குள் நுழைந்து, உள்ளே எட்டிப் பார்த்தேன். அங்குக் காணப்பட்ட ஒரு ஹாலில் ஒருவன் அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்தான். அவனைத் தவிர, வேறுயாரும் அங்கிருப்பதாய்த் தோன்றவில்லை. உடனே மெல்ல மேலும் சென்று பக்கத்திலிருந்த ஒரு அறைக்குள் ஒளிந்துகொண்டேன்.

இவ்விதம் சுமார் கால்மணிநேரம் கழிந்தது. அதன் முடிவில் அப் பாபி, அந்த ஹாலுக்கு வந்து ஒருதரம் நாலா பக்கங்களையும் கவனித்தான். பிறகு மடமடவென்று மாடிக்குப் போய்விட்டான். மறுநிமிஷம் இப் பெண் அங்குத் தோன்றி, வாசற் கதவைத் தாளிட்டுக்கொண்டபிறகு, நானிருந்த அறையை அணுகி அதையும் வெளிப்பக்கம் தாளிட்டுவிட்டாள். அதைக்கண்ட நான் அடைந்த பயத்திற்கும் விசனத்திற்குமளவில்லை. பிறகு ஆவலுடன் அக்கதவிலிருந்த சந்தின்வழியாய் வெளியே எட்டிப் பார்க்க, இப் பெண், அந்தஹாலில் எரிந்துகொண்டிருந்த விளக்கை அணைத்துவிட்டு, பின் கட்டுக்குப் போய்விட்டாள். இதற்குள் என் கைகால்கள் நடுங்கிக்கொண்டிருந்தன. என் ஹிருதயம் படபடவென்று அடித்துக்கொண்டிருந்தது. அவ்வறையைவிட்டு வெளிக்கிளம்பும் வழியறியாமல் திகைப்புற்று சிறையில் அடைக்கப்பட்ட கைதிபோலானேன். இவ்விதம் மேலும் அரைமணிநேரம் கழிந்தது. பிறகு, ஒருகால் அவ்வறைக்குள் வேறுகதவுகளிருக்குமென்று எதிர்பார்த்து, ஆவலுடன் நாலாபக்கங்களையும் சோதித்தேன். அதன் பலனாய் என் வலதுகைப்பக்கத்தில், ஒரு ஜன்னலிருப்பதை அறியவே, மிகவும் ஜாக்கிரதையுடன் அதன் கதவுகளைத் திறந்தேன். உடனே எனக்குண்டான சந்தோஷத்தை யாரறிவார்கள்? ஏனென்றால், அதற்குக் கதவுகள்மட்டும் இருந்தனவேயொழிய, கம்பிகளில்லை. அவ்வழியாய் நான் தாராளமாய்த் தப்பமுடியுமென்று கண்டு, கொஞ்சநேரம் சந்தோஷத்தின் மிகுதியால், எதையும் செய்யச் சக்தியற்றவனாய், நின்றுகொண்டிருந்தேன். அச்சமயம், மேலே மாடியில் யாரோ நடக்கும் சப்தம் கேட்

கவே, அந்த ஜன்னலின்வழியாய் வெளியே எட்டிப் பார்த்தேன். மறுநிமிஷம் இரண்டாங்கட்டிலிருந்த மாடிப்படிகளின் வழியாய் ஒருவர் இறங்கி கொல்லைப்பக்கம் போவதைக் கண்டேன். இருட்டாயிருந்தபோதிலும் அது அப்பாபியே என்பதையறிந்து, சப்தமின்றி ஜன்னலைத் தாண்டிக் குதித்து, அவனைப் பின்பற்றிச் சென்றேன். நான் பெரிய தெரு ஹோட்டலில் கண்டெடுத்து, வாசித்த அக் கடிதத்திலிருந்து, அவன் இரகஸ்யமாய், அக் கடிதமெழுதியவனை மடத்துத்தெரு வீட்டில் சந்திக்கும்பொருட்டே வெளிக்கிளம்பி இருக்கிறானென்று நினைத்தும், எப்படியும் அவ் வீட்டில் என்னிடம் தனிமையில் சிக்கிக்கொள்ளுவானென்று நம்பியும், என் அவசரத்தையும் பதட்டத்தையும் அடக்கிக்கொண்டேன். பிறகு நாங்கள் அவ் வீட்டின் தோட்டத்தை அடைந்ததும், அவன், அங்கிருந்த காடிகானவின் கேட்டைத் திறந்துகொண்டு, மறுபடியும் அதை மூடாமல், வேகமாய் மடத்துத்தெருவைநோக்கி நடந்தான். கடைசியில் அத் தெருவுக்கு வந்ததும், அதிலுள்ள ஒரு வீட்டின் கதவைத் தன்னிடமிருந்த ஒரு சாவியால் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான். அச்சமயம் மணி 11 இருக்கும். இன்னும் அதற்குள், மழையும் காற்றும் ஆரவாரத்துடன் ஆரம்பித்துவிட்டன. எங்கும் பயங்கரமான இருள் சூழ்ந்துகொண்டிருந்தது.

நிற்க, நான், அவ் வீட்டுத் திண்ணையின்மேலேறி, ஒரு மூலையில் பதுங்கிக்கொண்டேன். சற்றுநேரத்திற்கெல்லாம், உள்ளே சென்ற அப் பாபி மறுபடியும் வெளியே வந்து, வீதியிலிறங்கி யாரையோ எதிர்பார்ப்பவன்போல், இருதிசைகளையும் கவனித்தான். இதைக் கண்ட நான் மெல்ல முன்சென்று; உள்ளே நுழைந்துவிட்டேன். அங்கு ஒன்றின்பின் ஒன்றாய்ப் பல அறைகளிருந்தன. அதில் இரண்டாவது அறையில் ஒரு விளக்கு எரிந்துகொண்டிருந்தது. நான் பல காரியங்களை யுத்தேசித்து அதற்குப் பின்னாலிருந்த மூன்றாவது அறையில் ஒளிந்துகொண்டேன். அச்சமயம் எனக்கிருந்த சந்தோஷத்திற்கு அள



வில்லை. அவன் இனி என்னிடமிருந்து தப்புவது அசாத்தியமென நினைத்தேன். ஆவலுடன், எப்பொழுது அவன் மறுபடியும் உள்ளேவருவானென்று எதிர்பார்த்தவண்ணம் இருந்தேன். ஆனால் அவன் வாசலிலேயே நின்றுகொண்டிருந்தான். வர வர, மழையும் காற்றும் அதிகரித்துக்கொண்டேவந்தன. கடைசியில், பக்கத்திலிருந்த ஆசாரியார் மடத்தில் மணி 12 அடிக்கும் சப்தம் என் செவிகளில் விழவே, என் மனதில் கவலையும் விசனமும் தோன்றி என்னை வதைக்கலுற்றன. ஏனென்றால் அவன் எதிர்பார்த்த நண்பன், சிக்கிரம் வந்துவிடுவானென்றும், அப்படி அவன் வந்துவிடும்பக்ஷத்தில் நான் என் காரியத்தை முடிப்பது, கஷ்டமென்றும் பயந்தேன். நான் பயந்ததுபோலவே சற்றுநேரத்திற்கெல்லாம், அவனும், சமார் 25, 26வயதுள்ள மற்றொருவனும் உள்ளே நுழைந்து, வெளிக் கதவைத் தாளிட்டுக்கொண்டு விளக்கெரிந்துகொண்டிருந்த அறைக்குள் வந்து உட்கார்ந்துகொண்டார்கள். நான் அம் மற்றொருவனைப் பார்த்ததுமே, அவன் பரம அயோக்கியன் என்பதைக் கண்டுகொண்டேன். அவன், ஆவலுடன்,

"என்ன! காயா? பழமா?" என்று வினவினான். முத்துசாமி அய்யர் (அது முத்துசாமி அய்யரென்பதில் சந்தேகமில்லை) கொஞ்சநேரம் வாயைத் திறக்கவில்லை. பிறகு, "பழமே!" என்று தாழ்ந்த குரலில் விடையளித்தார். இதைக் கேட்டதும், அம் மற்றொருவனுடைய முகம் மலர்ந்தது. அவன் அடக்கமாட்டாத சந்தோஷத்துடன்,

"எங்கே? எங்கே? அவைகளை எடும் பார்ப்போம்." என்றான். ஆனால் முத்துசாமி அய்யர், கண்டிப்பாய்,

"நீர் அவைகளைப் பார்க்கவேண்டியது அவசியமில்லை. ஏனென—" என்று அவன் மேலே பேசுமுன், அம் மற்றொருவன், திடுக்கிட்டவனாய்,

"என்ன! அவசியமில்லையா? நீர் பேசுவதின் அர்த்தம் எனக்குத் தெரியவில்லையே!" என்று வினவினான். முத்துசாமி அய்யர்,

"சரி; வீணில் நாம் சண்டையிடுவதில் எனக்கிஷ்டமில்லை. இதோ என் மனதிலிருப்பதைச் சொல்லிவிடுகிறேன். நான் கொண்டுவந்திருக்கும் நகைகளில் உமக்குப் பாகம் கொடுப்பதாய் எனக்கு உத்தேசமில்லை. இப்பொழுது என்னிடம் ரொக்கமாய் ரூபாய் 1300 இருக்கிறது. அதைத் தருகிறேன். அத்துடன் நீர் திருப்தி அடைய வேண்டும்" என்றார். மற்றொருவன்,

"ஓய்! நீர் இப்படிப் பேசுவீர் என்று எனக்குத் தெரியும். ஆனால் நீர் வம்புபண்ணுவதில் பிரயோஜனமில்லை. மரியாதையாய் நகைகளைக் காண்பியும். பிறகு பங்கைப் பற்றிப் பேசுவோம்." என்றான். முத்துசாமி அய்யர்,

"ஐயா! நீர் என்னைப் பயமுறுத்துவது முடியாத காரியம். எனக்கு ஆதியிலிருந்தே நீர் பெரும் போக்கிரி என்பது தெரியும். ஆனால், நீர் கனகபுரிக்குப் போக்கிரியானால், நான் பட்டணத்துப் போக்கிரி என்பதை மனதில் வைத்துக்கொள்ளும்." என்றார். மற்றொருவன்,

"ஓஹோ! அப்படியா? சரி; இருக்கட்டும். நீர் இப்பொழுது என்னசொல்லுகிறீர்?" என்றான். முத்துசாமி அய்யர்,

"அதான் ஆரம்பத்திலேயே சொல்லிவிட்டேனே. ரூபாய் 1300 கொடுப்பேன். வேண்டுமானால் அதை வாங்கிக்கொள்ளும்." என்றார். மற்றொருவன்,

"பேஷ்! பேஷ்!! ஓய்! என்னை யாரென்று நினைத்துப் பேசுகிறீர்? என்காணும்! அந் நகைகள் குறைந்தது ரூபாய் 30000 பெறும். நம்முடைய ஒப்பந்தப்படி எனக்கு ரூபாய் 15000 கிடைக்கவேண்டும். அதற்குள்ள நகைகளை நீர் கொடுக்காவிட்டால் உம்மை விடேன். ஏனையா? பட்டணத்துப் போக்கிரிகள் ஒருவரை ஒருவர் மோசம் செய்வதுண்டோ?" என்றான்.

ஆனால், முத்துசாமி அய்யர், அந் நகைகளை எடுக்க உறுதியுடன் மறுத்துவிட்டார். அதைக் கண்டதும் மற்



றொருவனுடைய முகம் கோபத்தினால் ஜ்வலித்தது. இன்னும், அச்சமயம், அவனுடைய கண்களின் பார்வை மிகவும் பயங்கரமாயிருந்தது. அவன், மறுபடியும்,

"ஆனால் நீர் நகைகளைக் கொடுக்கமாட்டீரா?" என்று வினவ, முத்துசாமி அய்யர், தீர்மானமாய்,

"மாட்டவே மாட்டேன். இதில் நீர் செய்தவேலைக்கு 1300 ரூபாயே அதிகம்." என்று விடையளித்தார்.

இதைக் கேட்டதும், அம் மற்றொருவனுடைய முகம் விகாரமடைந்தது. முத்துசாமி அய்யர் பேசிக்கொண்டேயிருக்கையில், அவனுடைய வலதுகை அவனுடைய இடுப்பின்பக்கம் சென்று ஏதோ வேலைசெய்துகொண்டிருந்தது. இதைக்கண்ட நான் சீக்கிரம்அங்குக் கொலைநடக்குமென்று நினைந்தேன்.

வர வர, மழையும் காற்றும் மேலும் அதிகரித்துக் கொண்டேவந்தன. இடியும் மின்னலும் சொல்லிமுடியாது.

நிற்க, நான் கொலைநடக்குமென்று எண்ணியது பிசகல்ல. ஏனென்றால், மறுவிநாடி, அம் மற்றொருவன், திடீரென்று, தன் மடியிலிருந்து பளபளவென்று மின்னும் ஒரு க்ஷவரக் கத்தியை எடுத்து, முத்துசாமி அய்யரைக் கொன்றுவிட்டான். அப்பப்பா! அக் காக்ஷியை நினைக்க என் உடல் இன்னும் நடுங்குகிறது. முத்துசாமி அய்யர், மரணவேதனையில், தன் கால்களையும் கைகளையும் அப்படியும் இப்படியும் உதைத்துக்கொள்ளவே, பக்கத்திலிருந்த விளக்கு உடைந்து அணைந்துபோய்விட்டது. ஆகவே, மறுபடியும் எங்கும் இருள் சூழ்ந்துகொண்டது. நான் உடனே மெல்ல என்னிடத்தைவிட்டுக் கிளம்பி வெளியே நழுவிவிட்டேன்.

இவ்விதம் அப்பாவி கொலைசெய்யப்பட்டபோதிலும், நான் என் ஸம்சயத்தைத் தீர்த்துக்கொள்ள முடியாமற் போய்விட்டது. அப்பொழுதும், நான் என் பெண்ணைக் கெடுத்தது வக்கில் தாண்டவம்ஐயரே என்று நினைத்துக்

கொண்டிருந்ததால், எப்படியாகிலும், அவருடைய பெண்ணைக் கெடுக்க மறுபடியும் நிர்மானித்தேன்.

ஏற்கனவே, ஒருதரம், அக் கார்யத்தில் நான் அபஜயமடைந்துவிட்டதால், இப்பொழுதாகிலும், எவ்வித இடையூறுகளும் நேரிடாமலிருக்க, அவளை இக் கிராமத்திற்கே கொண்டுவந்துவிடுவது நலமெனக் கருதி, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலானேன். அதன் பலனாய் இரண்டு தினங்களுக்குமுன், என் வண்டியுடனும், சில முரடர்களுடனும், கனகபுரிக்கு வந்துசேர்ந்தேன்.

முத்துசாமி அய்யர் கொலைசெய்யப்பட்டதினம், நான் தாண்டவம்ஐயருடைய வீட்டை நன்றாய்க் கவனித்ததிலிருந்து, கொல்லைப்பக்கமாய், அதற்குள் எளிதில் நுழையக்கூடுமென்பதை அறிந்து, காமாக்ஷி அம்மாள் தெருவுக்கும் பட்டாபிராமன் தெருவுக்கும் இடையிலுள்ள சந்தில் வண்டியை நிறுத்திவிட்டு, அவ் வீட்டின் காடிகானைக்கோட்டை ஏறிக் குதித்து, நாங்கள் உள்ளே நுழையும் சமயம், நல்லவேளையாய், இப் பெண்மணி கைகளில் லாந்தலுடனும் செம்புடனும் கொல்லைப்பக்கம் வந்தாள்.

அச்சமயம் இரவு மணி 11 இருக்கும். அன்றும் நல்ல மழை பெய்துகொண்டிருந்தது.

இப் பெண், தன் வீட்டிற்குள் தனக்கு எவ்வித ஆபத்தும் நேரிடாதென்று எண்ணியவள்போல், விளக்கை ஒரு மரத்தின் மறைவில் வைத்துவிட்டு தோட்டத்திற்குள் வந்தாள். உடனே நாங்கள் அவள்மீது பாய்ந்து, தயாராய்க் கொண்டுவந்திருந்த மயக்க மருந்தை உபயோகப்படுத்தவே, அவள் தன் சுயநினைவை இழந்தாள். பிறகு அவளைத் தூக்கிச் சென்று, எங்கள் வண்டியில் போட்டுக்கொண்டு, வேகமாய் இக் கிராமத்தை நோக்கி வந்தோம்.

கடைசியில் ஒருவழியாய் இவ் வீட்டை அடைந்தோம். ஆனால் நாங்கள் உள்ளே நுழைந்த சில நிமிஷ நேரத்திற்கெல்லாம் இவ் வீட்டு வாசலில் மற்றொரு வண்டி வந்து நிற்



கவே, கவலையுடன் வெளியே சென்று பார்த்தேன். நான் சற்றும் எதிர்பார்க்காத என் ஆப்த சிநேகிதன் ஒருவன் வந்திருப்பதைக் கண்டு, வேறுவழியில்லாமல், இப் பெண்ணை மாடியில் ஒரு அறையில்போட்டு, கூச்சலிடாமலும் தப்பாமலுமிருக்க, இவளுடைய கைகால்களைக் கட்டி, வாயில் துணியை அடைத்துவிடும்படி ஏற்பாடு செய்துவிட்டேன். வந்த என் நண்பன் இன்றுமாலை 6 மணி வரையில் என்னுடனிருந்தான். ஆகையால், அதுவரையில் நான் ஒன்றும் செய்யமுடியவில்லை பிறகு நடந்தவிஷயங்களை நான் சொல்லவேண்டியதில்லை.'' என்றார்.

* * * * *

மறுநாட் காலை 8 மணியிருக்கும்.

கமலத்தின் தந்தை கோபாலய்யர், தம் புதல்வியின் பக்கத்திலுட்கார்ந்துகொண்டு, அவளுக்குப் பல தேறுதல்களைச் சொல்லிக்கொண்டிருந்தார். நடுவில்,

''அம்மா! அத்துப்பறிவன் இன்னும் நம் வீட்டிற்கெதிரில் நின்றுகொண்டிருக்கிறானே பார்க்கிறேன்.'' என்று சொல்லி, தம்மிடத்தை விட்டெழுந்து, தெருப்பக்கமிருந்த ஒரு ஜன்னலையணுகி, கலவரத்துடன் வெளியே எட்டிப்பார்த்தார். அங்கு சமீபத்தில், அவர் பயந்தது போலவே, சென்ற சிலதினங்களாய் அவர் கண்டுவந்த ஒருவன் வட்டமிட்டுக்கொண்டிருக்கவே, அவருடைய பீதியும் குழப்பமும் அதிகரித்தன. அவருடைய கண்களில் நீர் தளும்பியது. விசனத்தின் மிகுதியால், மூச்சுவிடவும் கஷ்டப்பட்டார். பிறகு திரும்பி, முகம் வெளுத்து, பயமே அவதாரம்போலுட்கார்ந்துகொண்டிருந்த, கமலத்தைப் பார்க்கவே, வருத்தம் தாங்காமல், ஓடி அவளை இறுகக் கட்டிக்கொண்டு, ''என் உயிர் நிலையே! உன் கதி யென்னவாகுமோ?'' என்று கல்லுங்கரையும் விதம் கதறினார். பிறகு, தம் இருகரங்களையும் கூப்பி,

''ஹே! தெய்வமே! இதுவரையில் நான் எறும்பையும் ஹிம்சித்தவனல்லவே. அப்படியிருக்க நீ என்னை இப்

படிச் சோதிப்பது நியாயமோ. அந்தோ! மணி எட்டரைக்கு மேலாய்விட்டதே. அப்பாவி எந்த நிமிஷம் வருவானோ தெரியவில்லையே. என் ஜன்மத்தில் நான் சொன்ன வாக்கைத் தட்டியதில்லையே. அப்படியே அச்சண்டாளன் வந்து, என் கண்மணியைத் தனக்கு விவாஹம் செய்து கொடுக்கவேண்டுமென்று பலவந்தம் செய்யும்பக்ஷத்தில், நான் என்ன செய்வேன்?" என்று மறுபடியும், தன் புதல்வியை அணைத்துக்கொண்டு, "என் செல்வமே! நீ பாலகிருஷ்ணனைக் கல்யாணம் செய்துகொண்டு, அவனுடன் சுகப்படுவாய். அதைக்கண்டாவது நாம் கொஞ்சம் சந்தோஷிக்கலாமென மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்தேனே பாவி. தெய்வம் என் வாயில் மண்ணை அள்ளிப்போட்டுவிடும்போலிருக்கிறதே. அம்மா! நான் என்ன செய்வேன்?" என்று புலம்பவே, கமலம்,

"அப்பா! நீங்கள் வருத்தப்படுவதால் வரக்கூடிய லாபமென்ன? பிரும்மன் என் தலையில் எழுதிய எழுத்தை உங்களால் அழிக்க முடியுமோ? நான் வாஸ்தவத்தில் நிரபராதியாயிருக்கும்பக்ஷத்தில் தெய்வம் என்னை அவசியம் காப்பாற்றும். கடவுளை நம்பினவர்கள் கைவிடப்படமாட்டார்கள் என்பது வசனமல்லவோ?" என்றாள்.

இவ்விதம், தந்தையும் புதல்வியும் அரைமணிநேரம் வரையில் பேசிக்கொண்டிருந்தார்கள். அதன் முடிவில் கோபாலய்யர், தாம் கொல்லைப்பக்கம் போய்விட்டு வருவதாகச் சொல்லி, வெளியே சென்றார். கமலம் அவருடைய தலை மறைந்ததும் தன்னறைக்குச் சென்று படுத்துக்கொள்ளுமெண்ணத்துடன் அவ்விடத்தை விட்டுப்போகும் தருவாயிலிருந்தாள். ஆனால் அச்சமயம் உள்ளே நுழைந்த சீச்சு, அவளைத் தடுத்து,

"கமலம்! எங்கே, என்னைக் கண்டதும் ஓடுகிறாய்?" என்று சிரிக்கவே, அப்பெண்மணியின் முகம் கோபத்தினால் ஜ்வலித்தது. அவள், வெறுப்புடன்,



"சீச்சீ! மிருகமே! வழியை விடு." என்று நாகம்போல் சீறிக்கொண்டே வெளியே செல்ல முயன்றாள். ஆனால் சீச்சு, மறுபடியும் வழிமறித்து,

"அடியே! நீ இப்படித் துள்ளுவதில் பிரயோஜனமில்லை. சரி; இருக்கட்டும். கோபாலய்யர் எங்கே?" என்று இறுமாப்புடன் வினவினான்.

கமலம்:— "எனக்குத் தெரியாது."

சீச்சு:— "ஓஹோ! அவரும் எனக்குப் பயந்து ஒளிந்துகொண்டுவிட்டாரோ? சரி; பாதகமில்லை. வா; அவர் வரும்வரையில் நாமிருவரும் பேசிக்கொண்டிருப்போம்."

கமலம்:— "உமக்கு வெட்கமில்லையா? என்னுடன் தனிமையில் பேச உமக்கென்ன பாத்தியம்?"

சீச்சு:— "வாஸ்தவமே. தற்சமயம் எனக்குப் பாத்தியமில்லை. ஆனால், கூடியசீக்கிரம் நீ என் மனைவியாகப்........"

கமலம்:—"தூ! மானமில்லா மட்டி! வாயைமூடு. நீ உடனே வழி விடாதபக்ஷத்தில் கூச்சலிடுவேன். சீ! உன் ஜன்மம் பாழ்க்க நேற்று வாங்கின அடிகளை இதற்குள்ளா மறந்துவிட்டாய்?"

சீச்சு, "அடியே! நான் மறக்கவில்லை. ஆனால் அவைகளை நான் உன் பொருட்டல்லவோ வாங்கினேன். எங்கே அதற்குப்பதிலாக ஒரு முத்தம்கொடு பார்ப்போம்." என்று சொல்லிக்கொண்டே, திடீரென்று கமலத்தின்மீதுபாய்ந்து, அவளை யிறுகக்கட்டிக்கொள்ளவே அப்பெண்மணி, "ஐயோ அப்பா! ஐயோ சித்தி!" என்று வீறிட்டு அலறினாள்.

அதேசமயம் உள்ளே வந்த நம் சபேசனும் பாலகிருஷ்ணனும், அவளிட்ட கூக்குரலைக் கேட்டுப் பதறிய மனதுடன், அவ்வறைக்குள் ஓடிவந்தார்கள். அவர்கள் சீச்சுவைக் கண்டதும், புலிகள்போல் பாய்ந்து, அவனைப் பிடித்துக்கொண்டார்கள். சபேசன், வாயைத் திறக்காமல்,

அவனுடைய குடுமியைப்பற்றிக் கர கரவென்று இழுத்து வந்து கூடத்திலிருந்த ஒரு தூணில் பின்கட்டுமுறையாய்க் கட்டிவிட்டான். மறுநிமிஷம் அங்கு வந்து சேர்ந்த கோபாலய்யரும் காமாக்ஷியும் அக் காக்ஷியைக் கண்டே திடுக்கிட்டார்கள். கோபாலய்யர், பயந்த பார்வையுடன், ஏதோ பேசவாரம்பித்தார். ஆனால், சபேசன்,

"ஐயா! நீங்கள் பயப்படவேண்டாம். இவனால் ஒன்றும் செய்யமுடியாது." என்றான்.

இதைக்கேட்ட காமாக்ஷியும் கமலமும் வியப்புற்று திகைத்து நின்றார்கள். ஆனால் சீச்சு, சபேசன் தன்னைப் பயமுறுத்துவதாக நினைத்து, கோபத்துடன் கோபாலய்யரைப் பார்த்து,

"ஓய்! இது நீர் செய்த காரியமே. இரும்; உம்மை இலேசில் விடேன். நீங்கள் என்னை இவ்வீட்டிலேயே அடைத்துவைக்க முடியாது. நான் வெளியே சென்று அதே நிமிஷம் அத் துப்பறிபவனிடம் உம்முடைய பெண்ணைக் காட்டிக்கொடுக்காவிட்டால், என்பெயர் சீச்சுவல்ல..." என்று அவன் மேலேபேசுமுன், சபேசன், கலகலவென்று நகைத்துவிட்டு,

"டேய்! அத் துப்பறிபவனை இதோ நானே அழைத்துக்கொண்டு வருகிறேன். உன் இஷ்டப்படி செய்." என்று சொல்லிக்கொண்டே திரும்பி, பக்கத்திலிருந்த பாலகிருஷ்ணனைப் பார்த்து,

"கிட்டு! வெளியிலிருக்கும் அப்பயலை இங்கு இழுத்துக்கொண்டு வா." என்று கூறவே, பாலகிருஷ்ணன் வெளியே ஓடினான்.

இதைக்கேட்ட சீச்சு திடுக்கிட்டான். அவனுடைய முகம் வெளுத்தது.

நிற்க, கோபாலய்யர், ஒன்றும் தெரியாமல் சபேசன் ஏதோ சிறுபிள்ளைத்தனமாய் செய்து விடுவானோவென்று பயந்து, கலவரத்துடன்,



"அப்பா சபேசா! என்ன இது? வேண்டாம்; அவன் சுத்த அயோக்கியன். வீணில்...' என்று மேலே பேசுமுன், சபேசன். அவரைத் தடுத்து,

"ஐயா! நீங்கள் பயப்படவே வேண்டாம். உங்கள் பெண் நிரபராதியென்பதை இதோ ரூபித்துவிடுகிறேன். சற்றுப் பொறுங்கள். என்று சொல்லிக்கொண்டிருக்கும் பொழுது, பாலகிருஷ்ணன், அதுவரையில் அவ்வீட்டின் சமீபத்தில் வட்டமிட்டுக்கொண்டிருந்தவனை அலங்கோலமாயிழுத்துக்கொண்டுவந்தான். அவனுடைய சரீரம் முழுமையும் பயத்தினால் நடுங்கிக்கொண்டிருந்தது. சபேசன், அவனையணுகி, அவனுடைய கரங்களைப் பற்றிக்கொண்டு,

"டேய்! உடனே உண்மை வெளியாகவேண்டும். நீ யார்?" என்று பயமுறுத்தவே, அவன் பேசவும் சக்தியற்றவன்போல், மருண்ட பார்வையுடன், தூணுடன் கட்டப்பட்டிருந்த சீச்சுவை நோக்கினான். அதைக்கண்ட சபேசன்,

"அடே! உங்களுடைய சூது முழுமையும் எனக்குத் தெரியும். நீ உடனே உள்ளதை ஒப்புக்கொள்ளாவிட்டால், இதோ போலீஸ்காரனைக் கூப்பிட்டு உன்னைக் கைது செய்யச் சொல்லுவேன்." என்றான்.

கோபாலய்யர் தம் செவிகளையும் நம்பாதவர்போல் காணப்பட்டார். அவன் தம் புதல்வியைக் கைது செய்து விடுவானோவென்று அவர் பயந்ததுபோக, அவனைக் கைது செய்யக்கூடுமென்பதை யறியவே, அவர் பிரமித்துநின்றார்.

நிற்க, சபேசன் தற்சமயம் தன்னிடம் மாட்டிக்கொண்டிருந்தவனை மேலும் துரிதப்படுத்தவே, அவன், தடுமாற்றத்துடன்,

"ஸ்வாமி! நான் பிள்ளைகுட்டிக்காரன். என்னை மன்னித்துவிடுங்கள். நான் துப்பறிபவனுமல்ல மண்ணுமல்ல. நான் சென்னையில் தாசிகளுக்கு மாப்பிள்ளை தேடிக்கொடுப்பவன். அவர் (சீச்சுவைச் சுட்டிக் காண்பித்து) சென்னைக்கு

வரும்பொழுதெல்லாம் என்னைச் சந்திப்பதுண்டு. சுமார், ஒருமாதகாலத்திற்குமுன், அவர் அங்கு வந்திருந்தபொழுது என் வீட்டிலேயே இருந்தார். ஒருநாள் மாலை நாங்களிருவரும் ஊரைச்சுற்றிவிட்டு கடைசியில் அதோ நிற்கும் (கமலத்தைக் காட்டி) பெண்மணியின் வீட்டையடைந்தோம். அப்பொழுது அவர் என்னை வெளியிலிருக்கும்படி சொல்லிவிட்டு, தாம் சீக்கிரம் திரும்பிவிடுவதாக அதற்குள் சென்றார். பிறகு அரைமணி நேரம்வரையில் நான் காத்துக்கொண்டிருந்தேன். அதன் முடிவில் இப்பெண்மணி வெளியே வந்து வேகமாய் நடக்கவாரம்பித்தாள். அவள் வெளியே வந்த ஒரு நிமிஷநேரத்திற்கெல்லாம் வெளியே வந்த அவர், பரபரப்புடன் என்னிடம் வந்து,

“அடே சின்னு (என்னுடைய பெயர்)! அவள் எங்கு போகிறாளென்பதை நாம் அறியவேண்டும். வா; வா.” என்று சொல்ல, இருவரும் இப்பெண்மணியை பின்பற்றிச் சென்றோம். எல்லோரும் கடைசியில், திருவல்லிக்கேணியிலுள்ள ஒரு சந்தையடைந்ததும், அதிலிருந்த ஒரு சிறிய வீட்டிற்குள் இப்பெண்மணி நுழைந்தாள். ஆனால் மறுநிமிஷம் வெளியே வந்து திரும்பிச் செல்லவே, அவர், என்னைப் பார்த்து,

“சின்னு! நீ அவளுடன் சென்று அவள் என்ன செய்கிறாளென்று பார். இவ்வீட்டிற்குள் ஏதோ விசேஷமிருக்கிறது. நான் அதைப் பார்க்கிறேன்.” என்றார். நான் தாமதிக்காமல் மறுபடியும் இப்பெண்மணியைப் பின்பற்றிச் சென்றேன். இவள் அரைமணிநேரம்வரையில் பல டாக்டர்களுடைய வீட்டிற்குள் நுழைவதும் உடனே வெளிவருவதுமாயிருந்து, மறுபடியும் அவ்வீட்டிற்குத் திரும்பிச் சென்றாள். அவள் அதற்குள் நுழைந்ததும், அவர் (சீச்சு) என்னிடம் ஓடிவந்து,

“டேய் சின்னு! இவளை நம்மிடம் சிக்கிக்கொள்ளும்படி செய்யவேண்டும். இவ்வீட்டிற்குள் ஒரு குழந்தை கொலைசெய்யப்பட்டுக் கிடக்கிறது. நீ உடனே உள்ளே



சென்று ஒரு துப்பறிபவன்போல் பாசாங்குசெய்து, இவளை பயமுறுத்திக்கொண்டிரு.” என்று சொல்லி, நான் செய்யவேண்டிய கார்யங்களையெல்லாம் எனக்குக் கற்பித்துக்கொடுத்தார். இன்னும், நான் அவர் சொன்னபடி செய்தால், எனக்கு 100ரூ. பணம் கொடுப்பதாகச் சொன்னார். ஸ்வாமி! நான் பரம ஏழை. பணத்தின்மேல் ஆசைப்பட்டு இக் கார்யத்தைச் செய்துவிட்டேன்.” என்று சொல்லிக்கொண்டே தரையில் விழுந்து சபேசனுடைய கால்களைப் பிடித்துக்கொண்டு, “தயவுசெய்து என்னை மன்னித்துவிடுங்கள். இனி லக்ஷரூபாய் வந்தபோதிலும், இப்பேர்ப்பட்ட கார்யங்களைச் செய்யமாட்டேன்.” என்று கெஞ்ச, சபேசன்,

“அடே! இனியாகிலும் புத்தியாய்ப் பிழை. சரி; அதோ அந்த மூலையில் உட்கார்ந்துகொள். நீ ஓடயத்தனித்தால் உன் கால்களைக் கட்டிவிடுவேன். உஷார்.” என்று சொல்லவே, அவன் அப்படியே செய்தான்.

பிறகு, சபேசன் திரும்பி, வெறுப்புடன் சீச்சுவை நோக்கியவண்ணம்,

“அடே! இவ்விதம் பேதைப்பெண்களை யேமாற்றி, அவர்களை உன் வலையில் சிக்கவைத்து, சற்றும் ஈவு இரக்கமில்லாமல், ஹிம்சிக்கும் பாவிகளை நான் இதுவரையில் கண்டதில்லை. உடனே மரியாதையாய் நீ செய்ததை ஒப்புக்கொள்.” என்று கண்டிப்பான குரலில் சொல்லவே, சீச்சு, வாய் உளற,

“நான் உண்மையைச் சொல்லிவிட்டால் என்னையும் மன்னித்துவிடுவதாக முதலில் வாக்களி.” என்றான். சபேசன்,

“அதைப்பற்றிப் பிறகு பேசுவோம். முதலில் நான் சொன்னபடி செய்.” என்று கூறவே, சீச்சு, பரிதாபப்படத்தக்கவிதம், கோபாலய்யரை நோக்கி,

“மாமா! தெரியாமல் செய்துவிட்டேன். என்னை மன்னிக்கவேண்டும்.” என்று கெஞ்சினான். கோபாலய்யர், கோபத்துடன்,

“சீச்சீ! நாயே! உடனே உண்மையைச் சொல். அக்குழந்தையைக் கொன்றது யார்? நீ உடனே சொல்லாவிட்டால், இதோ போலீஸாருக்கு சொல்லியனுப்புவேன்.” என்று பயமுறுத்தவே, சீச்சு, நடுங்கி,

“மாமா! வேண்டாம்; வேண்டாம். உண்மையைச் சொல்லிவிடுகிறேன்.” என்று கெஞ்சினான்.

நிற்க, சபேசன் துரிதமாய் வெளியே சென்று, வாசலில் நின்றுகொண்டிருந்த ஒருவனை அணுகி, ஆவலுடன்,

“ஏண்டா! அவர் இன்னும் வரவில்லையோ?” என்று கேட்க, அம் மற்றொருவன்,

“இதோ வந்துவிடுவார்.” என்று சொல்லிக்கொண்டேயிருக்கையில், அங்கு ஒரு வண்டி வந்து நின்றது. அதிலிருந்து ஒரு கிழவர் இறங்கிச் சபேசனை அணுகி, அவனிடம் ஒரு கடிதத்தைக் காண்பிக்கவே, அவன் ஆச்சர்யத்துடன் அக் கிழவரை உற்றுநோக்கிவிட்டு,

“பேஷ்! பேஷ்! நல்லகார்யம் செய்தீர்கள். வாருங்கள்; வாருங்கள்.” என்று சொல்லவே, இருவரும் உள்ளே சென்றார்கள். சபேசன், அவரைச் சீச்சு பார்க்காவண்ணம் அழைத்துச் சென்று, சீச்சு கட்டப்பட்டிருந்த இடத்திற்குப் பின்பக்கத்திலிருந்த ஒரு அறைக்குள் உட்கார வைத்துவிட்டு, மறுபடியும் சீச்சுவிடம் சென்று,

“அடே! நீ தயங்குவதில் எள்ளளவும் பிரயோஜனம் இல்லை. உடனே உண்மையைச் சொல்லிவிடு.” என்று மறுபடியும் அதிகாரத் தொனியில் கூறவே, சீச்சு, வேறு வழியில்லாமல், கீழ்க்கண்டவாறு பேச ஆரம்பித்தான்.

“நான் சென்ற இரண்டுவருஷகாலமாய்க் கமலத்தின் மீது ஆசைகொண்டு, அவளை எப்படியாகிலும் மணந்து



கொள்ளத் தீர்மானித்தேன். ஆனால் அவளை நான் சரியான வழியில் அடைவது சாத்தியமல்லவென்பதை நன்கறிந்தவனாகையால், அவளை ஏமாற்றி, என் சூழ்ச்சியில் சிக்கவைத்து, அதன் பலனாய், அவளையும் கோபாலய்யரையும் மருட்டிப் பலவந்தமாய் மணந்துகொள்ள நினைத்து, அப்பேர்ப்பட்ட சமயம் எப்பொழுது வருமோ என ஆவலுடன் எதிர்பார்த்துவந்தேன்.

நான் சென்னைக்குப் போகும்பொழுதெல்லாம், அவள் வீட்டிற்குச் சென்று, அவளைப் பார்க்காமல் வருவதில்லை. ஆகையால், சுமார் 1½ மாதகாலத்திற்கு முன் நான் அங்குப் போயிருந்தபொழுது, அதே எண்ணத்துடன் அவளுடைய வீட்டிற்குச் சென்றேன். நான் அதற்குள் நுழைந்து அவளுடைய அறைக்குள் எட்டிப்பார்த்தபொழுது, அவள் கையில் ஒரு கடிதத்தைப் பிடித்தவண்ணம் விம்மிவிம்மி அழுதுகொண்டிருந்தாள். அவளை அவ்விதம் விசனத்துக்குள்ளாக்க, அக் கடிதத்தில் என்ன எழுதப்பட்டிருக்கும் என்று ஆச்சர்யப்பட்டவனாய், முடியுமானால், அதைப் பார்க்க நிச்சயித்தேன். சற்றுநேரத்திற்கெல்லாம் கமலம் வெளியே வர, நான் அவள் என்னைப் பார்க்காதபடி ஒரு மறைவில் ஒளிந்துகொண்டேன். பிறகு அவள் சமையலறைப்பக்கம் செல்லவே, அவசரத்துடன், அவளுடைய அறைக்குள் நுழைந்தவன், ஒரு மேஜையின்மேல் அக் கடிதம் பிரித்தபடியே இருப்பதைக்கண்டு, ஆவலுடன், அதில் எழுதப்பட்டிருந்ததை வாசிக்கலானேன். அதில் நாலைந்து வரிகளே காணப்பட்டன. தன் கற்பையிழந்து அதன் பலனாய், இரஹஸ்யமாய் பிரஸவித்திருந்த அவளுடைய தோழி ஒருவள் தான் அன்று மாலை தற்கொலை செய்துகொள்ளப் போவதாயும் அதற்குள் ஒருதரம் கமலத்தைப் பார்க்க விரும்பி, அவளை உடனே தன் இருப்பிடத்திற்கு வரும்படியும் எழுதியிருந்தாள். இதை வாசித்ததும் எனக்குண்டான சந்தோஷத்திற்களவில்லை. ஏனென்றால், கமலம் எப்படியும் தற்கொலைசெய்துகொண்ட தன் தோழியுடன் தனிமையிலிருப்பாளென்றும், அச்சமயம் நான் அவளைக் கண்

டுபிடித்து அவளே அப்பெண்ணை விஷம்வைத்துக் கொன்று விட்டாளென்றும் பயமுறுத்தி, என்னிடம் சிக்கவைக்கலா மென்று நம்பினேன். பிறகு மாடியிலிருந்த அவளுடைய தாத்தாவிடம் சென்று, கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந் தேன். அதன் முடிவில் கமலம் அங்கு வந்தாள். தான் அவசரமாய் வெளியே போய்விட்டு வருவதாய் அவரிடம் விடைபெற்றுக்கொண்டு கீழே சென்றாள். அவள் போனதும், நானும் உத்தரவுபெற்றுக்கொண்டு வெளியேவர, கமலம் கொஞ்சதூரத்தில் போய்க்கொண்டிருப்பதைக் கண்டேன். உடனே, அச்சமயம் என்பொருட்டுக் காத்துக்கொண்டிருந்த சின்னுவை அழைத்துக்கொண்டு அவளைப் பின்பற்றிச் சென்றேன். கடைசியில், நாங்கள் திருவல்லிக்கேணிக்குச் சென்றபொழுது, இரவு மணி 7க்கு மேலிருக்கும். சின்னு சொன்னபடி, கமலம் அவ்வீட்டிற்குள் நுழைந்ததும், உடனே ஒருவருடன் வெளியே வந்ததையும், பிறகு,கவலையுடன், அவள் சென்றதையும் காண என் மனதில் ஒருவித சந்தேகம் தோன்றியது. இன்னும், அவளுடன் அவ் வீட்டிலிருந்து வெளியே வந்த அம்மனிதனைக் கண்டதும்—” என்று சீச்சு மேலே பேசுமுன், சபேசன், திடுக்கிட்டவன்போல்,

“ஆனால் அவனை நீ பார்த்தாயோ?” என்று வினவ, சீச்சு முகம் வெளுத்தது. தன்னை யறியாமல் சொல்லக் கூடாத ஒருவிஷயத்தைச் சொல்லிவிட்டவன்போல் காணப்பட்டான். பிறகு தடுமாற்றத்துடன்,

“இல்லை.” என்று விடையளித்தான். ஆனால் அவன் இல்லை என்று சொன்ன போதிலும், அவனுடைய கண்கள், “ஆகா! நன்றாய்ப் பார்த்தோம்.” என்று கூறுவனபோலிருந்தன.

நிற்க, சபேசன் கொஞ்ச நேரம் மௌனமாயிருந்தான். ஆனால் அச்சமயம், அவனுடைய மூளை மிகவும் சுருசுருப்புடன் வேலைசெய்துகொண்டிருந்தது. கடைசியில், ஒருதரம் பெருமூச்செறிந்துவிட்டு, “ஆஹா! அப்ப



டித்தானிருக்கவேண்டும் சரி; உடனே என் சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்ளுகிறேன்.” என்று தனக்குள் சொல்லிக்கொண்டே, பக்கத்திலிருந்த தன் நண்பன் பாலகிருஷ்ணனைப் பார்த்து ஜாடை செய்துவிட்டு வெளியே சென்றான். பாலகிருஷ்ணன் வந்ததும்,

“கிட்டு! என்வீட்டில், நம் நண்பன் ராஜேந்திரனும் ஆடுதுறை மணி அய்யர் என்ற ஒருவரும் இருக்கிறார்கள். உடனே சென்று அவ்விருவரையும் அழைத்துவா.” என்று சொல்லவே, பாலகிருஷ்ணன் போய்விட்டான். பிறகு, சபேசன், மறுபடியும் உள்ளே சென்று சீச்சுவைப பார்த்து,

“சரி; மேலே சொல்!” என்றான். இதற்குள் சீச்சுவின் கைகால்கள் நடுங்கவாரம்பித்துவிட்டன. அவனுடைய முகம் பார்ப்பதற்கே விகாரமாயிருந்தது. அவன்,

“அவ்வீடு ஒரு சந்திலிருந்ததாலும், இன்னும் ஏற்கனவே நன்றாய் இருட்டி பலத்த மழை பெய்துகொண்டிருந்ததாலும், நாங்கள் அங்கிருந்ததை ஒருவரும் கவனிக்கவில்லை. சின்னுவைக் கமலத்துடன் அனுப்பிவிட்டு நான் மெல்ல அவ்வீட்டுத் திண்ணையின்மீது ஏறி ஒரு ஜன்னல் வழியாய் உள்ளே எட்டிப்பார்த்தேன். அங்கு ஒரு அறையில், பிரக்ஞையற்று ஒரு பெண்மணி தரையில் கிடந்தாள். பக்கத்தில் கொல்லப்பட்ட குழந்தை யொன்று காணப்பட்டது. கமலத்துடன் வெளியே வந்த அம்மனிதன் அப்பெண்மணியை யுற்று நோக்கியவண்ணம் நின்றுகொண்டிருந்தான். சற்றுநேரத்திற்கெல்லாம் அவனும் வெளியே சென்று சீக்கிரம் ஒரு வண்டியுடன் திரும்பிவந்தான்.”

அச்சமயம், சீச்சுவை நிறுத்தும்படி ஜாடை செய்துகொண்டே சபேசன்,

“சரி; நீ மேலே செய்த காரியங்களை நாங்கள் ஊகித்துக்கொள்ள முடியும்.” என்று சொல்லிக்கொண்டிருக்கையில் அந்நியன் ஒருவன் அங்கு வரவே, எல்லோரும் அவன் பக்கம் திரும்பினார்கள். அவன் பார்ப்பதற்கு ஒரு துருக்கனைப்போலிருந்தான். கோபாலய்யர், அவனைப் பார்த்து,

"ஐயா! நீர் யார்? உமக்கு என்ன வேண்டும்?" என்று கேட்க, அவன், சபேசனைச் சுட்டிக் காண்பித்து,

"எனக்கு அவருடன் கொஞ்சம் பேசவேண்டும்." என்று விடையளித்தான். அவனுடைய குரலைக் கேட்டதும், சபேசனுக்குண்டான ஆச்சர்யத்திற் களவில்லை. அவன் ஆவலுடன்,

"ஏண்டா தங்கவேலு! என்ன விசேஷம்?" என்று வினவினன்.

வாஸ்தவமே! அவன், அதுவரையில் நம் சாமியாரைக் கவனித்துக்கொண்டிருந்த துப்பறியும் தங்கவேலுவேயொழிய வேறல்ல. சபேசன், மறுபடியும் அவனைப் பார்த்து,

"ஏண்டா? நீ இங்கு வந்த காரண மென்ன?" என்று வினவ,

"ஸ்வாமி! நான் இங்கு வந்ததற்குக் காரணம் வேண்டுமானால் சற்று இப்படித் தனிமையில் வாருங்கள். சொல்லுகிறேன்." என்று கூறவே சபேசன், அவனருகிற் சென்றதும், தாழ்ந்தகுரலில் "ஸ்வாமி! நம் சாமியாரும் அதோ தூணில் கட்டப்பட்டிருப்பவரும் (சிச்சு) ஒருவரே" என்றான்.

இதைக் கேட்டதும், சபேசன் அப்படியே பிரமித்து நின்றான். பிறகு,

"ஏண்டா இதை நீ எப்பொழுது கண்டுபிடித்தாய்?" என்று வினவ, துப்பறியும் தங்கவேலு,

"இதை இரண்டு தினங்களுக்குமுன் கண்டுபிடித்தேன். அதற்குப் பிறகு உங்களைக் காணச் சந்தர்ப்பமே யேற்படவில்லை. தற்சமயம், நான் அதோ கட்டப்பட்டிருக்கும் சிச்சுவின் வீட்டிலிருந்தே வருகிறேன். நாம் உடனே சென்று, அவனுடைய அறையிலிருக்கும் ஒரு பெட்டியைத் திறந்து பார்ப்போமாகில், அதில் சாமியாரின் உடுப்புக்களையும், இன்னும் அவர் தாண்டவம்ஐயருடைய



மூத்த குமாரனுகிய மூர்த்தி அய்யரிடமிருந்து பலவந்தமாய் எழுதிவாங்கிய பத்திரங்களையும் பார்க்கலாம். அதுவுமன்றி, சிச்சுவின் தாயாராகிய பொன்னுப்பாட்டியுடன் நான் தந்திரமாய் பேசியதிலிருந்து, இவர் சாமியார் வேஷத்தில் பலதரம் தம் வீட்டிற்கு வந்ததை அப்பாட்டியே ஒப்புக்கொண்டாள்." என்று விடையளித்தான்.

சபேசன் கொஞ்சநேரம் அசைவற்று நின்றான். பிறகு "சரி; இப்பொழுது இதில் சந்தேகமேயில்லை." என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

அச்சமயம், பாலகிருஷ்ணன், ராஜேந்திரன், ஆடுதுரை மணி அய்யர் இம்மூவரும் அங்கு வந்துசேர்ந்தார்கள். மணி அய்யர் கட்டப்பட்டிருந்த சிச்சுவைக் கண்டதும் திடுக்கிட்டார். பிறகு கொஞ்சநேரம் அசைவற்ற மரம்போல் நின்றார்.

இதைக் கண்டதும் அங்கிருந்த அனைவரும் ஒன்றும் தெரியாமல் அவரையே உற்றுநோக்கியவண்ணமிருந்தார்கள். சபேசன், மணி அய்யரைப் பார்த்து,

"ஸ்வாமி! என்ன விசேஷம்? நீங்கள்—" என்று அவன் மேலே பேசுமுன், மணி அய்யர், தம் ஆள்காட்டி விரலால் சிச்சுவைச் சுட்டிக் காண்பித்து,

"அப்பா! மடத்துத்தெருவில் முத்துஸாமி அய்யரைக்கொன்றவன் இவனே!" என்றார்.

---

## அத்தியாயம் 15.

"மடத்துத்தெருவில் முத்துஸாமி அய்யரைக்கொன்றவன் இவனே!" என்று, ஆடுதுரை மணிஅய்யர் கூறியதும், சிச்சுவின் மனோநிலைமையை நாம் வர்ணிக்கவும் வேண்டுமோ? தலைசுழல, நாவரண்டு "[illegible] வீரிட்ட வண்ணம் தன் சிரத்தை [illegible] டவன், மறுவினாடி மூர்[illegible]ந்தான்.

[illegible]

நிற்க, தாங்கள் காணுவது ஸ்வப்பனமோவென்று நினைப்பவர்கள்போல் காணப்பட்ட அங்கிருந்த எல்லோரும் திகைப்பும் வியப்புமுற்று, கலவரப் பார்வைகளுடன், ஒருவரையொருவர் நோக்கினார்கள். கோபாலய்யர் சுபாவத்தில் மிகவும் தயாளகுணமுள்ளவராகையால், அச்சமயம், சீச்சுவின் பரிதாபநிலைமையைக் கண்டதும், அவருடைய மனம் நெருப்பிற்பட்ட மெழுகுபோல் இளகியது. உடனே அவன் தமக்குச் செய்த தீங்குகளெல்லாவற்றையும் மறந்தார். சீச்சுவின் சிரம், நிற்கச் சக்தியற்று, அப்படியே அவனுடைய வலது தோளில் சாய்ந்துகிடந்தது. அக்காக்ஷியைக் காணச்சகிக்காமல், அவர் சபேசனை நோக்கி,

"அப்பா! என்ன இருந்தபோதிலும் இந்த ஸ்திதியில் நாம் இவனைக் கட்டிவைப்பது மிகவும் பாவம். உடனே அவன் கட்டுக்களை யவிழ்த்து அவனுக்கு மறுபடியும் பிரக்ஞைவர ஏற்பாடு செய்யவேண்டும்." என்று சொல்லிக்கொண்டே திரும்பி தம் மனைவியைப் பார்த்து, பரபரப்புடன் "காமாக்ஷி! உடனே ஒரு செம்பில் ஜலம் கொண்டுவா." என்று உத்தரவிட்டார். பிறகு, அவசரத்துடன் அவர் சீச்சுவின் கட்டுக்களையவிழ்க்க, அவனுடைய சரீரம் பிரேதம்போல் தொப்பென்று தரையில் விழுந்தது. இதற்குள் காமாக்ஷி ஜலத்துடன் திரும்பிவர, கோபாலய்யர் கவலையுடன் அவனுடைய முகத்தைக் கழுவலானார்.

நிற்க, சீச்சு தன் குற்றங்களை ஒப்புக்கொள்ளுமுன், சபேசன் வெளியே சென்றானென்றும், அச்சமயம் அங்கு ஒரு வண்டி வந்து நிற்க, அதிலிருந்து இறங்கி ஒரு கிழவர் வந்தாரென்றும், அவரைச் சபேசன் சீச்சு பார்க்காவண்ணம் ஒருஅறையில் உட்காரவைத்தானென்றும் சொன்னோமல்லவா? அக்கிழவரும் இதற்குள் அவ்வறையைவிட்டு வெளியே வந்து, சபேசனுடன் நின்றுகொண்டிருந்தார். இன்னும் அவர் [illegible] போலீஸ் இன்ஸ்பெக்டராகிய [illegible] [illegible]றல்ல வென்பதை இட[illegible] [illegible] சபேசன் சீச்சு தன்

188774

"பால வித்யா"

1930ஸ்ரீ ஸெப்டம்பர்மீ பஞ்சாங்கம்.

| தேதி | தமிழ் | வார. திதி, நக்ஷத்திரம், தியாஜ்ஜியம், யோகம், முதலியன. |
|---|---|---|
| 1 | கசு | திங் நவ சஉ-உசு கேட் உசு கக, தி சஎ-உச, ஜேஷ்டாஷ்ட ஸி |
| 2 | கஎ | செவ் தெ ௩௩-௪சு, மூல உ௩-சசு, தி உரு-௩௪, [தி ருரு சஉ, அ, ஸி. |
| 3 | கஅ | புத ஏகா ௪அ கஉ, பூரா ௩௪ ௩உ, [தி ருசு-உரு, ஸர்வஏகா, அ |
| 4 | ககூ | வியா துவா ருஉ-௩௪, உத்ரா ௪0 கக, [சே 0-௩க, தி ருக-க௩., ஸி. |
| 5 | உ0 | வெ திர ருஎ உ௪, ஶ்ரு ௪சு-உ௩, [தி ருஏ-உஎ, பிரதோ, ம, ஸி. |
| 6 | உக | சனி சது ௬0-0, அவி ருஉ ரு0; [சே க-௩சு, அனந்-விரு, ஸி, அ |
| 7 | உஉ | ஞாயி சது உ-உஎ சத ருக-உ, தி சஉ-௪உ, பௌ திதி, ஸி. |
| 8 | உ௩ | திங் ◯ எ-சு, பூரட் ௬0 0, தி கசு ௩.௪, மஹாளயாரம்பம், ம. |
| 9 | உ௪ | செவ் பாத்ரப-தி-பிர கக-உ0, பூரட் ௪-சசு, தி ௩0 சஉ, ம, அ |
| 10 | உரு | புத துவி க௪-௩ரு, உத்ரட் சு ௩ரு, தி சக-உசு, ஸி, ம. |
| 11 | உசு | வியா திரு கசு-௪ரு, ரேவ க௩-உஉ, தி 0-0, ஸி. அ. [பர. அ, ஸி.) |
| 12 | உஎ | வெ சது கஎ-௩சு அசு கரு-ரு௪, தி ரு-உசு, தி ௪0 உரு மகா) |
| 13 | உஅ | சனி பஞ் கஎ-சஉ, பர கஎ-கக, ✳, தி சஎ-கரு, கார் உப ஸி, அ |
| 14 | உகூ | ஞாயி ஷஷ் கரு-௩எ கார் சஎ உ0 தி ருசு-௪0, ஸி, அ. |
| 15 | ௩0 | திங் ஸப் கஉ-ரு௩ ரோ கசு-உ0, சே 0 உக, தி உ.சு ருஉ, அ. |
| 16 | ௩க | செ அஷ் சு-அ, மிரு ச௪-உக, தி ௩௪-உ௪, கன்-ரவி ௪௩-கக, [ தர்ப்பண அவிதவாநவமி, அதிதி, ஸி, ம. |
| 17 | க | புத நவ ௪-௩சு, தச ரு௪ ௪அ, திரு கக-௩எ, தி ௩சு-ரு௪, ஸி. |
| 18 | உ | வியா ஏகா ரு௩-௪சு, புண அ-கக, தி உசு-ருரு, ஸ்மா-ஏகா, அ. |
| 19 | ௩ | வெ துவா ௪எ-௪அ, பூச ௪-உ௪, தி ௩௪-க௪, வை ஏகா, ம. |
| 20 | ௪ | சனி திர ௪க-சசு, ஆயி 0 உ0, மக ருரு-ருஉ தி உஅ-கசு, ம, அ |
| 21 | ரு | ஞாயி சது ௩ரு ரு0, பூர ருஉ-கஉ தி க௪-ருஉ, போ அமா, ஸி, அ |
| 22 | சு | திங் ● ௩0-க௩, உத ௪அ-௩எ, தி சு-எ, சோம-மகாளய அமா, |
| 23 | எ | செவ் ஆசுவின சுக் பிர உரு-சு, ஹஸ் ௪ரு-௩சு, தி அ-௩ரு, [ஸி. |
| 24 | அ | புத துவி உ0-கரு சித் ௪௩-உ௩, தி ௪-க௪, [—, நவராதரி, ஸி. [தி ருஎ ௩ துலாயண ௧-௪௩, அஹ ௩.0-0, திதிதுவய, ஸி |
| 25 | கூ | வியா திரு சஎ-கக சுவா ௪௪-ருசு, சே0-சஉ, தி ருரு-ருஉ, அ, ஸி |
| 26 | க0 | வெ சது ௪௩-௩எ, சா ௪க-௩0, தி ருக-௪க, உ-லளி-விரு, ஸி |
| 27 | கக | சனி பஞ் க௩ ௪௩ அனு சஉ-௩௪, தி ருஎ-௩, ஷஷ்-உப, ஸி. |
| 28 | கஉ | ஞாயி ஷஷ் க௩ அ, கேட் ௪௪-௩அ, சே 0-ருரு, ம, அ. |
| 29 | க௩ | திங் ஸப் க௪ கரு, மூல சஎ-ருஎ, தி ரு-௪௪, தி ௪௩-௪௪, ஸரஸ் |
| 30 | க௪ | செவ் அஷ் கசு-௪0, பூரா ருஉ-உஅ, தி க௩-௪ரு, ஸி [வதிஆவா, ஸி |

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | செ குரு |
| | 16கன் ரவி<br>26 கட-செ<br>29 விரு-சு | | புத ரவி |
| சனி | | சுக் கே | |

புரட்டாசி

# பாலவித்யா சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களுக்கு வருஷம் ஒன்றுக்கு தபாற்கூலியுள்பட ரூபா. 1—8—0

சிங்கப்பூர், பினங், தென்னாப்பிரிக்கா, ஜாவா முதலிய வெளி நாடுகளுக்கு முன்பணம் ரூபா 2—0—0

ஜீவிய சந்தா உள்நாட்டிற்கு ரூ 15 வெளிநாட்டிற்கு ரூ 20

ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா இல்லை

"பாலவித்யா" தனி சஞ்சிகை அணா மூன்று

## சந்தாதாரர்களுக்கு முக்கிய அறிவிப்பு.

(1) சந்தாதாரர்கள் எந்தமாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் ஜனவரி மாதத்திலிருந்தே கணக்கு வைக்கப்பட்டு முன் மாதத்திய சஞ்சிகைகளெல்லாம் அனுப்புவிக்கப்படும்.

(2. நமது பத்திரிகை பிரதி இங்கிலீஷ் கடைசி தேதியில் வெளிவரும். பத்திரிகை வெளியான பத்து தினங்களுக்குள், அது உங்களுக்கு வந்து சேராவிட்டால், உடனே எங்களுக்கு எழுதினால் நாங்கள் கவனிப்போம். அதற்கு மேற்பட்டால் சஞ்சிகையின் கிரயத்திற்காக மூன்று அணா தபால்பில்லை வாங்கி அனுப்பினால்தான் மறுபடியும் ஸஞ்சிகை அனுப்பப்படும்.

(3) சந்தாதாரர்கள் நமது சந்தாத் தொகையை முன்னதாக மணியார்டர் பண்ணிவிட்டால் இரு பாலர்க்கும் ஸௌகர்யம். வி. பி. யில் அனுப்புவதாயிருந்தால் சந்தாதாரர்களுக்கு நான்கு அணா அதிகமாகச் செலவாகிறது. சிங்கப்பூர், பினங்கு முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி.யில் அனுப்பமுடியாது. அவர்கள் முன்பணம் மணியார்டர் செய்தாவது பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்கள் வாங்கியனுப்பியாவது சந்தாதாரராகச் சேரவேண்டும்.

(4) சந்தாதாரர்கள் நமக்கு கடிதம் எழுதும்போது எப்பொழுதும் சந்தாநம்பரை எழுதவேண்டும். பதில் வேண்டுவோர் ரிப்ளை கார்டாவது தபால் பில்லையாவது வைத்து அனுப்பவேண்டும்.

(5) முக்கிய குறிப்பு:—நமது ஸஞ்சிகைக்கு சிறந்த கட்டுரைகளும் அரியவியாஸங்களும் மற்றும் உள்ள அரிய நீதி ஸாரங்களும் பிரசுரிப்பதற்கு எற்றுக்கொள்ளப்படும். அப்படி அனுப்பப்படுபவைகள் ஸஞ்சிகை பிரசுரிக்கும் தேதிக்கு போதுமானகாலம் முந்தியே அனுப்பவேண்டும்.


### விளம்பர விகிதம்.

ஒரு மாதத்திற்கு, முழுப் பக்கம் ரூ 20. அரைப் பக்கம் ரூ 11.

மற்றபடி நீண்டகால விளம்பரத்திற்கு எங்கள் ஆபீஸுக்கு எழுதவும்.



பாலவித்யா ஆபீஸ்,

நெ.5, கீழ அய்யன் தெரு, ஸ்ரீவித்யா பிரஸ், கும்பகோணம்.

Printed and Published by N. Venkataraman,
at the Sri Vidya Press, Kumbakonam.